விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 25 திங்கட்கிழமை (11.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com

## அதிகாரப்பகிர்வு தொடர்பில் கோத்தா எதுவும் கூறவில்லை

### இரா.சம்பந்தன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய தரப்பினர் கடந்த காலங்களில் தாம் செய்த தவறுக்கான மன்னிப்பைக் கோரவில்லை. மாறாக தாம் செய்த தவறினை மறந்துவிட்டு வாருங்கள் எனக் கூறுகிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். நேற்று சாவகச்சேரியில் ➤23

## தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழும் சூழலை வடக்கில் மீண்டும் உருவாக்குவோம்

### கிளிநொச்சியில் மகிந்த தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வடக்கில் மீண்டும் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழும் சூழலை உருவாக்குவோம் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்கும் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த தேர்தல் பிரசார கூட்டம் நேற்று பிற்பகல் கிளிநாச்சி பசுமை பூங்காவில் இடம்பெற்றது. குறித்த கூட்டத்தில் உரையாற்றும் ➤23

அன்பு மாணவர்களே...!
கொழும்பு றோயல் கல்லூரி தயாரித்த க.பொ.த (சா) தரப் பரீட்சை மாதிரி வினாத்தாள்
உள்ளே...

# வெள்ளைவானில் 300 பேரைக் கடத்தி முதலைக்கு இரையாக்கினர் கோத்தா

## வெள்ளைவான் சாரதி பரபரப்புத்தகவல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற வெள்ளைவான் கடத்தல் விவகாரத்தின் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டவர் கோத்தபாய ராஜபக்ஷவே என்றும் இவ்வாறு அண்ணளவாக 300 பேர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு முதலைக்கு இரையாக்கப்பட்டனர். இவ்வாறு கடத்தப்பயன்படுத்திய வெள்ளை வான் ஒன்றின் சாரதியாக பணியாற்றியதாக கூறப்படும் ஒருவர் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)



## செல்லக்கதிர்காமத்தில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

(கொழும்பு)

செல்ல கதிர்காமம் - தனமல்வில பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் மற்றுமொருவர் காயமடைந்துள்ள ➤23

## நாளை மறுதினம் நள்ளிரவுடன் தேர்தல் பரப்புரைகள் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் நாளை மறுதினம் புதன்கிழமை நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவு பெறுவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

13 ஆம் திகதிக்கு பின்னரும் விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டால் சட்ட ஆலோசனைக்கு அமைய அதற்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இறுதி பரப்புரைக் கூட்டங்களின் செய்திகள் எதிர் ➤23

## புலிகளின் நிதியிலேயே கோத்தா பிரசாரம்

### ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலை புலிகளின் நிதியையே, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்துவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் கோத்தபாய வெற்றி பெற்றால் மீண்டும் கொலை மற்றும் வெள்ளை வான் கலாச்சாரம் உருவாகும். ➤23

## மகிந்தவின் ஆட்சியில் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டார்கள்

### ரணில் சுட்டிக்காட்டு

(நுவரெலியா)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டார்கள். மலையக இளைஞர் யுவதிகளுக்கு வேலை ➤23

## வெள்ளைக்கொடியுடன் வந்த தமிழர்களை சுட்டு வீழ்த்தியமையா தேசிய பாதுகாப்பு

### மகிந்த தரப்பிடம் கேள்வி எழுப்புகிறார் சந்திரிகா



(கொழும்பு)

சாதாரண தமிழ் மக்களை வெள்ளைக் கொடியுடன் வரக் கூறி, அவர்களை சுட்டுக் கொலை செய்து, நந்திக்கடலில் இரத்த ஆறு ஓடவிட்டமையா தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் செயல் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு கேள்வி ➤23

## கிணற்றில் தவறி விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

### வட்டுக்கோட்டையில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறிவிழுந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் வட்டுக்கோட்டை, சங்கரத்தையைச் சேர்ந்த நடராசா சண்முகவேல் (67வயது) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

அதாவது நேற்று ஞாயிற்றுக் கிழமை வீட்டில் உள்ள ➤23

## டெங்குக் காய்ச்சல் நோயாளர்களால் யாழ் போதனா வைத்தியசாலை நிரம்பி வழிகிறது

(கொழும்பு)

டெங்குக்காய்ச்சல் நோயாளர்களால் யாழ் போதனா வைத்தியசாலை நிரம்பி வழிகிறது. முன்பு ஒரு போதும் இல்லாத அளவில் இப்போது டெங்குக்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் யாழ் போதனா வைத்தியசாலையில் டெங்குக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் பெருமளவில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அதே வேளை டெங்குக்காய்ச்சலால் சிறுவர்களும் குழந்தைகளும் கணிசமான அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. டெங்குநோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்குவதிலும் அவர் ➤23

## கோத்தாவுக்கு பயந்து சஜித்தை ஆதாரிக்காதீர்கள்

### யாழில் தேசிய மக்கள் சக்தி

கோத்தா என்கின்ற பயத்தைக் காட்டி நாட்டில் 1100 கோடி ரூபாயைத் திருடிய ஐக்கிய தேசியக் கட்சியைத் சேர்ந்த சஜித் பிரேம தாஸவை ஆதரிப்பதை விடுத்து கறைபடியாத கரத்தை உடைய தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுர குமார திசாநாயக்கவை ஆதரிக்குமாறு தேசிய மக்கள் சக்தி இயக்கம் வேண்டுகோள் விடுத்தது.

யாழ்பாடி விருந்தினர் விடுதியில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே ஜே.வி.பியின் வடமாகாண அமைப்பாளர் சந்திரசேகரன் தெரிவித்தார். (ஞா-10)

## இன்று கூடுகிறது பாராளுமன்றம்

இன்றைய தினம் முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 2.30 வரை விசேட பாராளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கு சபாநாயகர் கரு ஜய சூரியவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப் படையில் விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய தவறுகள் குறித்த சட்டமூலம் தொடர்பில் விவாதிப்பதற்காக இந்த பாராளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரை அடுத்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதிவரை பாராளு மன்றத்தை ஒத்திவைப்பதற்கு பாராளுமன்ற விவகாரங்கள் தொடர் பான தெரிவுக்குழுவில் முன்னதாக தீர்மானிக்கப்பட்டது. (ஞா)

வேலைவாய்ப்பு
தமிழ் ரைப்பிங் மற்றும்
பக்க வடிவமைப்பு, விளம்பர வடிவமைப்பு
தெரிந்தவர்கள் தேவை
(ஆண், பெண் இருபாலாரும், ஆண்கள் இரவுக் கடமை)
யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்களுக்கும் முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
தொடர்பு:- 077 315 1326

தொண்டர்கள் தேவை
தற்கொலைகளைத் தடுப்போம்!
உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?
மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.
அடுத்த பயிற்சி நெறி மிக விரைவில்.
உடனே அழையுங்கள்.
கை கொடுக்கும் நண்பர்கள்
175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அண்மையில்)
077 900 8776 (மு.ப. 9.00 - பி.ப. 1.00)
(C-8190)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
முதலாம் ஆண்டு நினைவேந்தல்




அமரர் வல்லிபுரம் தர்மகுலசிங்கம்

ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்கும் அன்புத் தெய்வமே
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்

47, பொன்னுச்சாமி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(C-8191)
உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 197 9010

SINTEX
திறப்பு விழா



அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
SINTEX நிறுவனத்தின் கிளை திறப்புவிழாவை
முன்னிட்டு மாபெரும் விலைக் கழிவு
25% விலைக்கழிவு

அனைத்து விதமான சாறி வகைகள்,
பஞ்சாபிகள், குர்தாக்கள், சேட் வகைகள்,
இன்னும் சிறுவர், சிறுமிகளுக்கான
ஆடை வகைகள் என அனைவருக்கும்
ஏற்ற சகல விதமான ஆடைகளையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்.

Irupaalai Junction,
Irupaalai, Kopay.
T.P : 077 746 4650,
021 314 9393
Online Shopping
SINTEX
www.sintex.lk
(622)

காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்
union assurance
Trust in your tomorrow, today
தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம்

◎ முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 25,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



(920)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 17.11.2019க்கு முன்னர் tharmalingamk@ualink.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
218, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# வெளிநாட்டுத் தூதுவர்கள் யாரும் மகிந்தவை சந்திக்க விரும்பவில்லை

## போட்டுத் தாக்கினார் பொன்சேகா




(கல்முனை)

**மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுத் தூதுவர்கள் யாரும் அவரைச் சந்திக்க விரும்பவில்லை. காரணம் அவர் சமாதானத்தை விரும்பவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். அத்துடன் வெள்ளைவான் கலாசாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே ஒழிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.**

கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "2015 ஆம் ஆண்டு வெற்றிக்காக நீங்கள் அளித்த ஆதரவைப் போன்று வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவையும் ஆதரிக்க வேண்டும்.

அதற்கு முன்பு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நரகத்தில் வாழ்ந்தோம். அதைப் போன்ற உணர்விலே இருந்தோம்.

வெள்ளை வான் கலாசாரம் எமது ஆட்சிக்காலத்தில் தான் ஒழிக்கப்பட்டது. மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுத் தூதர்கள் யாரும் அவரைச் சந்திக்க விரும்பவில்லை. அவர் சமாதானத்தை விரும்பவில்லை என்பதே இதற்கு காரணம்.

லிபியாவில் சர்வாதிகாரியான கடாபியை மகிந்த சந்தித்து வந்த பின்னர் அந்த நாட்டு மக்களே புரட்சி செய்து கொன்றனர். அதே போன்றே மகிந்த அரசியல் புரட்சி மூலம் தூக்கியெறியப்பட்டார்.

தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக ஏற்பட்ட கலவரம் கோத்தபாய ராஜபக்ஷ விருப்பத்திற்காக மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் ஒரு யுத்தத்தை இந்த நாட்டு மக்கள் விரும்பவில்லை. ஒரு நாட்டிற்குள் இன்னொரு இனம் இரண்டாம் குடிமக்களாக வாழ்வதை நாங்கள் விரும்பவில்லை.

மீண்டும் ஒரு யுத்தம் இந்த நாட்டில் இடம்பெற விடமாட்டோம். சஹ்ரான்கள் உருவாகவும் விடமாட்டோம். அவர்களை ஆதரிப்போரையும் கண்காணித்து நல்வழிக்குக் கொண்டு வருவோம்.

இதேவேளை, நானே கல்முனைக்கு வந்து சிறப்பான தீர்விற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பேன். சஜித் பிரேமதாஸவை நம்புங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்கப் பிரஜாவுரிமை விவகாரம்; சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இல்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்கக் குடியுரிமை தொடர்பில் ஆராய்வதற்கான அதிகாரம் சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு கிடையாது.

இவ்விடயம் குறித்து நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டால் மாத்திரமே அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் சட்ட பணிப்பாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அமெரிக்கக் குடியுரிமையை நீக்கியவர்கள் தொடர்பில் அமெரிக்கா கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வெளியிட்டிருக்கும் பெயர் பட்டியலில் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவித்து சமூக வலைத்தளங்களிலும், இணையத்தள ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியிருந்தன.

அவற்றில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமை நீக்கப்படாவிட்டால் அவர் தேர்தலில் போட்டியிட முடியுமா? இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளதா? என்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (இ-7)

# மிலேனியம் ஒப்பந்தம் நிறுத்தப்படவில்லை



(கொழும்பு)

அமெரிக்காவுடன் கையெழுத்திட முன்மொழியப்பட்ட மிலேனியம் ஒப்பந்தம் திரும்பப் பெறப்படவில்லையென அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இந்த ஒப்பந்தம், நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு அதன் பின்னர் செயற்படுத்தப்படும் எனவும் தயாகமகே தெரிவித்தார்.

இதேவேளை மிலேனியம் ஒப்பந்தத்தில், கைச்சாத்திட வேண்டாமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை சில கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ள போதும், பல கட்சிகள், குறித்த ஒப்பந்தத்துக்கு தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குண்டுத் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டும்

## கோத்தாவுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதலுக்கு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ பொறுப்பு கூற வேண்டுமென கோரி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர் குண்டுத் தாக்குதலுக்கு கோத்தபாயதான் காரணமென கூறும் வகையில் பதாகைகளையும் ஏந்தி ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

# கோத்தாவின் வெற்றியின் பின்னர் அபிவிருத்திகள் மீள ஆரம்பமாகும்



பசில் வாக்குறுதி

(கொழும்பு)

மகிந்த ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் நல்லாட்சியில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டதும் அந்த அபிவிருத்திகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவுக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டம். நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு, பெரியபோரதீவில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த கூட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன், சந்திரகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

இதில் பெருமளவான ஆதரவாளர்கள் கலந்துகொண்டு தமது ஆதரவினை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாயவுக்கு தெரிவித்தனர். (இ-7)

# கால்பந்து விளையாட்டிற்கு மாறிய சகிப்

கிரிக்கெட்டில் விளையாட இரண்டு ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ளதால், வங்காளதேச அணியின் முன்னாள் கேப்டன் ஷாகிப் அல் ஹசன் கால்பந்துக்கு மாறியுள்ளார்.



சர்வதேச கிரிக்கெட்டில் தலைசிறந்த ஆல்-ரவுண்டராக திகழ்ந்தவர் வங்காளதேச அணி கேப்டன் ஷாகிப் அல் ஹசன். இந்திய தொடருக்கு முன்பாக ஐசிசி அவருக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதித்தது.

சூதாட்டக்காரர்கள் அவரை அணுகிய செய்தியை ஐசிசி ஊழல் தடுப்புக்குழுவிற்கு தெரிவிக்காததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் கிரிக்கெட் விளையாட முடியாமல் இருந்த ஷாகிப் அல் ஹசன், கால்பந்து விளையாட்டுக்கு மாறியுள்ளார்.

# யாருக்கு ரி20 உலகக்கிண்ணம்? -வோகன்


ஆஸ்திரேலியாவில் அடுத்த வருடம் நடைபெற இருக்கும் டி20 உலகக் கோப்பையை இந்த இரண்டு அணிகளில் ஒன்றுதான் வெல்லும் என வாகன் கணித்துள்ளார்.

ஆஸ்திரேலியா சமீபத்தில் இலங்கை, பாகிஸ்தான் அணிகளை சொந்த மண்ணில் துவம்சம் செய்தது. ஆஸ்திரேலியாவுக்கு இணையான சீதோஷ்ண நிலை கொண்ட நியூசிலாந்தில் நடைபெற்ற இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடரில் இங்கிலாந்து 3-2 எனத் தொடரை கைப்பற்றியது.



இந்த நிலையில் இங்கிலாந்து அணி கேப்டன் மைக்கேல் வாகன், இங்கிலாந்து அல்லது ஆஸ்திரேலியா ஆகியவற்றில் ஒன்றுதான் கோப்பையை கைப்பற்றும் என தெரிவித்துள்ளார்.

# மலிங்கவின் தலைவர் பதவிக்கு ஆபத்து




இலங்கை டி-20 அணிமோசமாக விளையாடி வருவதின் மூலம், அணியால் இனி மலிங்காவின் தலைமையின் கீழ் முன்னேற முடியாது என்று கிரிக்கெட் அதிகாரிகள் அவருக்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையின் டி -20 அணித் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா இன்னும் சில நாட்கள் மட்டுமே நீடிப்பார் என கூறப்படுகிறது.

கடந்த மாதம் இலங்கையின் இரண்டாவது நிலை அணி பாகிஸ்தானை டி-20 தொடரில் 3-0 என வைட்வாஷ் செய்தது. இதன் மூலம் 2020 ஆண்டு நடைபெறவுள்ள டி-20 உலகக் கோப்பைக்கு முன் இலங்கைக்கு புதிய நம்பிக்கை பிறந்தது.

ஆனால், கடந்த வாரம் அவுஸ்திரேலியாவில் டி-20 தொடரில் 3-0 என இலங்கை வைட்வாஷ் ஆனதால் தற்போது நம்பிக்கை இழந்துள்ளது.

பாகிஸ்தானில் இலங்கை அணியை மிகச்சிறப்பாக வழிநடத்திய தாசுன் சானகாவின் தலைமைத்துவ திறமை பாராட்டுக்குரியது. மேலும், டி-20 அணித் தலைவர் பதிவியை அவரிடம் ஒப்படைக்குமாறு தேர்வாளர்கள் வலியுறுத்தப்பட்டனர்.

இருப்பினும், கடுமையாக விமர்சிக்கப்பட்ட தேசிய தேர்வுக் குழு மாற்றத்தை எதிர்த்து மற்றும் மலிங்க மீது நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் அணியின் செயல்திறன் தொடர்ந்து குறைந்தது.

இதுதொடர்பாக அதிகாரிகள் மலிங்காவுடன் பேசியதாகவும், வரவிருக்கும் மாற்றம் குறித்து அவருக்கு அறிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

மலிங்காவின் தலைவர் பதவிக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவும் இல்லை. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவில் நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட டி -20 தொடர்களுக்கு அவர் தலைவராக நியமிக்கப்படுவார். இருப்பினும், அவர் தொடர்ந்து அணியை வழிநடத்துவார் என்பதில் எந்த உத்தரவாதமும் இல்லை என கூறப்படுகிறது.

அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறும் டி-20 உலகக்கோப்பைக்கு முன்னர் டி -20 களில் இருந்து ஓய்வு பெறுவதாக அச்சுறுத்தியதால் அவரை தலைவர் பதவியில் இருந்து நீக்க தேர்வாளர்கள் தயக்கம் காட்டுவதாக கூறப்படுகிறது.

# சச்சினின் சாதனையை முறியடித்த 15 வயது வீராங்கனை ஷபாலி வர்மா




இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் 15 வயது இளம் வீராங்கனை ஒருவர், ஜாம்பவான் சச்சினின் 30 ஆண்டுகால சாதனையை முறியடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியானது ஒரு நாள் தொடரை 2-1 என்கிற கணக்கில் கைப்பற்றியதையடுத்து, தற்போது டி20 போட்டிகளில் விளையாடி வருகிறது.

நேற்று நடைபெற்ற முதல் டி20 போட்டியில் இந்திய பெண்கள் 84 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்திய பெண்கள் அணியில் அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 46 பந்துகளில் 67 ரன்களும், ஷஃபாலி வர்மா என்கிற 15 வயது வீராங்கனை 49 பந்துகளில் 73 ரன்களும் எடுத்திருந்தனர்.

இவர்கள் இருவர் மட்டும் இணைந்து 143 ரன்களை குவிந்திருந்தனர். ஷஃபாலி வர்மா ஆறு பவுண்டரிகள் மற்றும் நான்கு சிக்ஸர்கள் என மைதானத்தின் வெளியே பந்துகளை பறக்கவிட்டார்.

அதோடு அல்லாமல் போட்டியில் சிறப்பாக விளையாடிய ஷஃபாலி வர்மா இளம் வயதிலே அரைசதம் கடந்த வீரர் என்கிற சாதனையை படைத்துள்ளார்.

ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் 16 வயது 285 நாட்களில் தன்னுடைய முதல் சாதனையை படைத்திருந்தார். ஆனால் ஷஃபாலி வர்மா 15 வயது 214 நாட்களில் அரைசதம் அடித்து, சச்சினின் சாதனையை முறியடித்துள்ளார்.

# மேற்கிந்திய தீவுகளிடம் வீழ்ந்தது ஆப்கான் அணி




ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 47 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக, நிக்கோலஸ் பூரன் 67 ஓட்டங்களையும், எவின் லெவிஸ் 54 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு 248 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 200 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டுக்கு பூச்சியம் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளது.

# உலக உடற்கட்டமைப்பு வெற்றிக்கிண்ண போட்டியில் இலங்கைக்கு இரு பதக்கங்கள்

73 ஆவது உலக உடற்கட்டமைப்பு வெற்றிக் கிண்ண போட்டியில் இலங்கைக்கு 2 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

65 கிலோ எடை வகுப்பில் போட்டியிட்ட சாகத்த அமில வீரர் தங்கப்பதக்கத்தை வென்றார். 60 கிலோ எடை வகுப்பில் போட்டியிட்ட இராஜ்குமார் என்ற மலையகத்தை சேர்ந்த வீரர் வெள்ளிப் பதக்கத்தை வெற்றி கொண்டார்.

இந்த போட்டி ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்றது. இலங்கையின் சார்பில் 11 பேர் இந்த போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## எனது ஆட்சியில் ஈனச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி

# எல்லோரும் இலங்கையர் என்ற கோட்பாட்டை பின்பற்றுவேன்

## சஜித் வாக்குறுதி



(கொழும்பு)

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலை அடுத்து கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவன் முறை காரணமாக மினுவாங் கொடை நகரிலுள்ள கடைகள் எரிக்கப்பட்டன. பள்ளி வாசலும் தாக்கப்பட்டது.

எனவே எனது ஆட்சியின் கீழ் இது போன்ற ஈனச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பேன் என, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வாக்குறுதியளித்தார்.

மினுவாங்கொடை நகரில் எலிஸ்பார்க் மைதானத்தில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான எட்வர்ட் குணசேகர தலைமையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரிய சுதந்திர வர்த்தக வலயம் அமையப்பெற்றுள்ள கம்பஹா மாவட்டத்தில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தை உணர்கிறேன். இதில் மினுவாங்கொடை மிக நீண்ட காலமாக கவனிக்கப்படாத தொகுதியாகவே காணப்படுகிறது. அந்தக் குறைபாட்டை நிச்சயம் நான் நிவர்த்தி செய்து தருவேன்.

மினுவாங்கொடை நகரை நவீன நகரமாக மாற்றி பொருளாதார ரீதியில் வளர்ச்சியடையச் செய்து, இங்கு கைத்தொழில் பேட்டை ஒன்றையும் அமைத்துக் கொடுப்பேன். இதன்மூலம், வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பேன்.

நான் எனது தந்தை வழியில் தூய்மையான அரசியலைச் செய்யவே விரும்புகின்றேன். மக்கள் சேவகனாகவே என்றும் நான் இருந்து, வாக்குறுதிக் கலாசாரத்தை விட செயற்பாட்டுக் கலாசாரத்தையே முன்னெடுப்பேன்.

எனது ஆட்சியில் இன, மத, மொழி வேறுபாட்டுக்கு இடமளிக்க மாட்டேன். எல்லோரும் இலங்கையர்கள் என்ற கோட்பாட்டை நானும், நீங்களும், எல்லோரும் பின்பற்ற வேண்டும். அப்போதுதான், எமக்கும் நாட்டுக்கும் மீண்டெழ முடியும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## சாவகச்சேரி பொதுச்சந்தையை குத்தகைக்கு வழங்க தீர்மானம்

(சாவகச்சேரி)

2020 ஜனவரி மாதத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்குவதென சாவகச்சேரி நகரசபையினர் தீர்மானித்துள்ளனர். கடந்த 2018ஆம் ஆண்டில் இருந்து நகரசபையின் ஒரு தரப்பினர், சந்தை நட்டத்தில் இயங்கு கிறது. ஆகவே சந்தையை குத்தகைக்கு வழங்கி அந்த நிதியில் நகரை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனக் கோரியிருந்தனர். இருப்பினும் அப்போது பெரும்பான்மை உறுப்பினர்கள் அதற்கு உடன்படாத நிலையில் தொடர்ந்தும் சந்தையை நகரசபையினரே நடத்தி வந்தனர்.

ஆனால் தற்போது இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் மேல்மட்ட ஆலோசனைகள் மற்றும்' சந்தை ஊழியர்கள் பற்றாக்குறை ஆகிய சில விடயங்களைக் கருத்திற்கொண்டு ஒரு வருடகாலத்திற்கு சந்தையை குத்தகைக்கு வழங்க நகர சபையினர் முன்வந்துள்ளனர். ஏலத்திற்கான அடிப்படைத் தொகை ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் என நகரசபையினர் தீர்மானித்திருப்பதுடன் அதனை 2020ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலும் உள்ளடக்கியுள்ளனர். கடந்த வருடம் சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்க வேண்டும் என சபையில் ஒரு தரப்பினர் கடும் அழுத்தத்தை பிரயோகித்த போது நகர சபையினரும் வேறு வழியின்றி சந்தையை குத்தகைக்கு வழங்க எத்தணித்தனர்.

அதன் விளைவாக சாவகச்சேரி பொதுச் சந்தை வியாபாரிகள் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்து அந்த வருடம் சந்தை ஏலம் போவதனை தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை சாவகச்சேரி பொதுச் சந்தையின் குத்தகை விவகாரம் சபையின் இரு தரப்பினருக்கு இடையிலான கௌரவப் போராட்டமாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

---

## வெற்றிபெற வேண்டியவர் யார் அது பற்றியே சிந்திக்க வேண்டும்

## கே.டி.லால்காந்த கூறுகிறார்

(கண்டி)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் சிந்திக்க வேண்டியது யார் வெற்றி பெற வேண்டியவர் என்பது பற்றியே என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1982ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் நடக்கும் மிக முக்கியமான ஜனாதிபதித் தேர்தலாக இம்முறைத் தேர்தல் மாறியுள்ளது. 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் பற்றி பேசப்பட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, கொப்பேகடுவ மற்றும் ரோஹண விஜேவீர பற்றி பேசப்பட்டது. மேலும் வேட்பாளர்கள் இருந்த போதிலும் இவர்கள் மூன்று பேர் பற்றியே அதிகம் பேசப்பட்டது.



இதன்பின்னர் மூன்று பேர் பற்றி தற்போதே பேசப்படுகிறது. கடந்த காலங்களில் தேர்தல் நெருங்கும் போது யார் வெற்றி பெறுவார் என அனுமானிக்க முடிந்தது. இம்முறை அப்படி அனுமானிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இம்முறை மும்முனை போட்டியில் எவருக்கும் 50 சதவீத வாக்குகளை பெற முடியாது என்ற அரசியல் நிலைப்பாடுகள் வெளியிடப்பட்டு வருகின்றன. அதிகமான வாக்குகளை பெறும் வேட்பாளருக்கு 50 வீத வாக்குகளைக் பெற முடியாது எனக் கூறப்படுகிறது.

இதனால், இரண்டாவது விருப்பு வாக்கிற்கு பெறுமதி ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இப்படியான நிலைமை இருக்கவில்லை. தற்போது அவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---



## மரண விசாரணையாளர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

(கொழும்பு)

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சால் திடீர் மரண விசாரணையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் கடந்த •7 ஆம் திகதி வியாழக்கிழமை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சின் மேலதிக செயலாளர் ஜீ.பி.என்.எம்.அபயசேகர, அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜீ.பி.ஏ.சுவர்ணலதா, திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மொகமட் வர்சான்,பொலநறுவை ஓய்வு நிலை நீதிவான் சுனில்டி கொஸ்ரா, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் டாக்டர் க.வாசுதேவா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.எம் நவாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சி நிகழ்ச்சி திட்டத்தில் வடக்கு- கிழக்கு மாகாண திடீர் மரண விசாரணை அதிகாரிகள் உட்பட அனைத்து மாகாணங்களிலும் உள்ள தமிழ் மொழிமூல திடீர் மரண விசாரணை அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-114)




## சங்கானை சந்தையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு வேண்டுகோள்

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை சந்தையில் குடிநீர் ,மலசல கூட வசதி உரிய முறையில் செய்து தரப்படவில்லை. வேல்ட் விஷன் நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்ட மலசல கூடம் கடந்த ஆறு மாதங்களாக பூட்டப்பட்ட நிலையிலுள்ளது.நீர் விநியோகத்திற்கான மோட்டர் பழுதடைந்தமையே அதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

பெருந்தொகைப் பணம் செலவிட்டு கட்டி முடிக்கப்பட்ட மலசல கூடத்தில் தண்ணீர் பிரச்சினையில் வேல்ட் விஷன் நிறுவனமும் பிரதேச சபையும் அக்கறை காட்டாமல் இருப்பது ஏன்? என வர்த்தகர்கள் விசனம் வெளியிட்டனர். அத்துடன் சங்கானை சந்தையில் சுமார் 130 கடைகள் உள்ளன. கடைத்தொடுதிகளின் குடிநீர்த் தேவைக்கென இரு குடிநீர்க் குழாய்கள் உள்ளன. அதில் சந்தைக்கு மேற்குப் பக்கத்திலுள்ள குடிநீர்க் குழாயில் நீரைப் பெறமுடியாதவாறு பிரதேச சபை தடை செய்துள்ளது. இதனால் அங்குள்ள கடை வியாபாரிகளும் சந்தை வியாபாரிகளும் தண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்ய பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தர கோருகின்றோம்.

வர்த்தகர்கள்
சங்கானை சந்தை

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

## அவிட்டம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

**அதிர்ஷ்ட ஜோதிடம்**

அவிட்டம் 1-2 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுடைய இராசி-மகரம் ஆகும்.அதன் அதிபதி-சனி ஆவார். அவிட்டம் நட்சத்திரத்தின் அதிபதி-செவ்வாய் ஆவார். அதன் சின்னம்-பெண்சிங்கம் ஆகும். எனவே இவர்களிடம் முன்கோபமும் மூர்க்கக்குணமும் உண்டு. ரொம்ப தைரியமாகவும் வீரமாகவும் இருப்பார்கள். யாராவது சண்டைக்கு வந்தால் அவரைக் கொலை செய்யக்கூடிய அளவுக்கு கோபம் இவர்களுக்கு வரக் கூடும். கொஞ்சம் சோம்பறித்தனமும் மந்த புத்தியும் இவர்களுக்கு உண்டு. பழிவாங்கும் சுபாவம் இவர்களுக்கு அதிகமாக இருக்கக் கூடும். கல்வி ஞானம் சுமாராக இருக்கும். சிலர் நன்றாகப் படித்து நல்ல வேலையில் அமர இடமுண்டு. பொதுவாக இவர்கள் கூலிவேலை முரட்டு வேலை, விவசாயம், இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில் செய்ய நேரிடும். தாய்ப்பாசம், தந்தைப்பாசம் சுமாராக இருக்கும். சகோதரப் பாசமும் சுமாராக இருக்கக் கூடும். இவர்களது இல்வாழ்க்கையில் இடையிடையே சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலகும். புத்திர பாசமுடையவர்கள். சிலர் மது அருந்துதல், புகை பிடித்தல், மாமிசம் உண்ணுதல் போன்ற தீய பழக்கங்களிலும் ஈடுபட நேரிடும். நீதி, நேர்மை, ஒழுக்கம் போன்ற நற்பண்புகளை இவர்களிடம் எதிர்பார்க்க முடியாது எனலாம்.

அவிட்டம் 3-4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுடைய இராசி-கும்பம் ஆகும். அதன் சின்னம்-கும்பம் சுமந்த புருஷன் ஆகும். இவர்களிடம் அதிக முன்கோபமும் பிடிவாதமும் உண்டு. மூர்க்க குணமுடையவர்கள். சோம்பேறித்தனம், மந்த புத்தியுடையவர்கள். கடுமையாக உழைத்து முன்னுக்குவருவார்கள். இரு ம்பு, நெருப்பு, மின்சாரம், எண்ணெய் சம்பந்த மான தொழில் செய்து ஜீவனம் நடத்த நேரி டும். இவர்களது இல்வாழ்க்கை சற்று போரா ட்டமாக இருக்கும். இவர்களிடம் நல்ல தெய்வ பக்தியும் தர்ம சிந்தனையும் உண்டு. குழந்தை பாசம், தாய்ப்பாசம், தந்தை பாசமுடையவர்கள். சிலர் பொதுநல ஊழியராகச் செயற்பட நேரிடும். சகோதர பாசம் குறைவாகவே இருக்கும். சிலர் நன்றாகப்படித்து நல்ல உத்தியோகத்தில் அமரும் யோகம் உண்டு. தலைவலி, சுரம், சளித்தொல்லை, மூலரோகம், கால்வலி முதலியன வந்து விலக இடமுண்டு.

## முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் மாதாந்த முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் அச்சுவேலி பிரதேச விவசாயப் போதனாசிரியர் பு.சாருஜன் "நவீன விவசாயம்" எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (இ-10)

## விசேட யோகா அசைவுகளுடன் திருமூலர் குருபூசை விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் நடத்தும் திருமூலர் குருபூசை விழா இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் பின் வீதியில் லிங்கா பெஷன் அருகில் கம்பன் கோட்டத்தில் யாழ்.யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி மா.வேதநாதன், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழத்தின் கணிதப் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழகத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி.கே. கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

"திருமூலரின் சமூக நோக்கு" எனும் தொனிப்பொருளில் விரிவுரையாளர் சி.ரமணராஜா உரை வழங்குவார். அத்துடன் யாழ். யோகா உலக மாணவர்களின் இலகு யோகா அசைவுகளும் இடம் பெறும். மேலும் யோகா ஆர்வ லர்கள் மத்தியில் பெரிதும் வர வேற்பை பெற்று வரும் விசேட யோகா அசைவுகளும் இடம்பெறும். (இ)




யாழ்.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் 90ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.இந்நிகழ்விற்கு விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்பீட விரிவுரையாளர் கலாநிதி செ.சேதுராஜா நினைவுப்பேருரை ஆற்றுவதையும் வட மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் திருமதி அ.சாந்தசீலன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## இராசி பலன்

**11.11.2019**

ஐப்பசி 25, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

சதுர்த்தசி முன்னிரவு 7.02 மணிவரை

அச்சுவினி முன்னிரவு 8.43 மணிவரை

சுபநேரம் 12.06-1.36 மணிவரை

இராகுகாலம் 7.36-9.06 மணிவரை

திருமூலர் குருபூசை

வளவன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| | இராசி பலன் | | |
| | | | |
| சனி, குரு, கேது | சுக் | சூரி, புத | செவ் |

**மேடம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர் சந்திப்புண்டு.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**கும்பம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமராட்சி காரியாலயம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் நேற்றுத் திறந்து வைக்கப்படடது. பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள இலகடி, அல்வாய் கிழக்கு பகுதியில் இக் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. இதில் வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச. சுகிர்தன், க.தர்மலிங்கம், வே. சிவயோகன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் அ.சா.அரியகுமார், கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரன், பருத்தித்துறை நகரசபை தலைவர் யோ.இருதயராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- மகாலிங்கம்)


## மணிவிழா வாழ்த்துக்கள்



எமது உடுவில் கல்விக் கோட்டத்தின் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 11.11.2019 இன்று ஓய்வு பெற்றுச் செல்லும்

Congrats!

உயர்திரு

**தர்மலிங்கம் மாதவன்**

அவர்களின் அளப்பரிய சேவையைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைவும் பல்லாண்டு காலம் நீடூழி வாழவும் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(சி-[illegible])

வாழ்த்துவோர்:- உடுவில் கல்விக் கோட்ட அதிபர்கள்.

## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

**திருமதி. பாலசறோஜா பாலசிங்கம்**

(சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் சைவசமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக 23.09.1999 முதல் 10.11.2019 வரை சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி பாலசறோஜா பாலசிங்கம் அவர்கள் ஓய்வுக் காலத் தில் தம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்

Congratulations!



கல்வி அபிவிருத்திப் பிரிவு, யாழ்ப்பாணம் கல்வி வலயம். (229)

## யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வில் சென்ற உயர் பணியாளர்களினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சி.மாணிக்கராஜா
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
சேவைக்காலம்
(05.07.2013-03.01.2019)



திரு.சண். தயாளன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)
சேவைக்காலம்
(27.08.1999-04.03.2019)



திருமதி கு. பாலாம்பிகை
(பதவி நிலை உதவியாளர்)
சேவைக்காலம்
(08.10.2006-20.10.2019)



திரு S.சற்குணராஜா
(பதவி நிலை உதவியாளர்)
சேவைக்காலம்
(26.09.2017-01.07.2019)



திருமதி சி.குமுதினி
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)
சேவைக்காலம்
(15.03.2013-27.05.2019)



திருமதி ந. பாலசிங்கம்
(ஆசிரிய ஆலோசகர்)
சேவைக்காலம் (23.09.1999-11.11.2019)

Best Wishes



திரு E.F.R. ஜெயகுமார்
(ஆசிரிய ஆலோசகர்)
சேவைக்காலம் (11.06.2008-19.04.2019)

Congratulations



திரு தி.தயாபரன்
(வளவாளர்)
சேவைக்காலம் (23.09.1999-09.10.2019)

Best Wishes



திரு K. விஜயகுமார்
(ஆசிரிய ஆலோசகர்)
சேவைக்காலம் (01.11.2011-22.08.2019)

(சி-8180)

வாழ்த்துவோர்:- ஊழியர் நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

# யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் பல திட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டன





(யாழ்ப்பாணம்)

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம்,புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிப்படுத்தலில் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கான 10,000 வீட்டுத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 2945 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2945 ரூபா மில்லியனில் அமைக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன.

(நெடுந்தீவு-30, வேலணை-96, ஊர்காவற்துறை-68, காரைநகர்-51, யாழ்ப்பாணம்-102, நல்லூர்-113, சண்டிலிப்பாய்-218, சங்கானை-137, உடுவில்-192, தெல்லிப்பழை-843, கோப்பாய்-360, சாவகச்சேரி-418, கரவெட்டி-138, பருத்தித்துறை-94 மற்றும் மருதங் கேணி-85)

இதில் நெடுந்தீவு பிரதேசசெயலகப் பிரிவு, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு, யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவுகளில் முடிவுறுத்தப்பட்ட வீடுகள் இம்மாதம் 6,7ஆம் திகதிகளில் மக்களிடம் கையளிக்கப்பட்டதாக தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்பட்ட காணிகள் அற்ற இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 72 வீடுகள் ஒரு மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்யப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகளான உள்ளக வீதிகள், குடிநீர் வசதிகள், மின்சார இணைப்புகள், கோவில் மற்றும் முன்பள்ளிக்கான கட்டட வசதிகளுடன் அமைக்கப்பட்டு அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியால் 7ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு மக்கள்மயப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) சு.முரளிதரன், பிரதேச செயலாளர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாணவர்களிடையே கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் நூற்றுக்கும் மேற்பட்ட திறன் வகுப்பறைகள் (Smart classrooms) வழங்கப்பட்டுள்ளதுடன் ஆசிரியர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சிகளும் மாவட்ட செயலகத்தால் நடத்தப்படுகின்றன. நெடுந்தீவு மகா வித்தியாலயம், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலை, நெடுந்தீவு மங்கயற்கரசி வித்தியாலயம், நெடுந்தீவு சிவப்பிரகாச வித்தியாசாலை, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, ஆவரங்கால் நடராஜா வித்தியாலயம், அச்சுவேலி ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் வழங்கும் வைபவம் 7ஆம் திகதி நடைபெற்றது.

புனித யோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு 7.5 மில்லியனில் பொதுநோக்கு மண்டபத்திற்கான தளபாடங்கள் மற்றும் ஒலி அமைப்பு உபகரணங்களும் யாழ். அருணோதயா கல்லூரிக்கு பொதுநோக்கு மண்டபம் மற்றும் வகுப்பறை வசதிகளை 55 மில்லியனில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது.

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு 12 மில்லியன், அராலி சரஸ்வதி வித்தியாலயத்திற்கு 14.9 மில்லியன், பன்னாகம் மெய்கண்டான் பாடசாலைக்கு 3 மாடிக்கட்டடம் - 17.4 மில்லியன், சித்தங்கேணி ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயத்திற்கு 12.5 மில்லியனும், கட்டைவேலி மகாவித்தி யாலயத்திற்கு ரூபா 15 மில்லியனும், மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்திற்கு 21.7 மில்லி யன்,தென்மாவிலை பால ஞானோதயா வித்தியாலயத்திற்கு 22.3 மில்லியனும், பலாலி வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திற்கு 22.3 மில்லியனும் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்திற்கு 8 மில்லியனும், சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்திற்கு 10.5 மில்லியனும் வகுப்பறை கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்டு வேலைகள் துரிதகதியில் இடம்பெறுவதுடன் இவ்வருட இறுதிக்குள் முடிவுறுத்தப்படும் என அமைச்சின் செயலாளர் வே.சிவ ஞானசோதி தெரிவித்தார்.


வட்டுக்கோட்டையில் புதிய தபால் அலுவலகத்தினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 2019.11.06 ஆம் திகதி நடைபெற்றது. இக்கட்டடத்தை அமைப்பதற்கான மொத்த கிரயம் 8 மில்லியன் ஆகும். இதில் ரூபா 4.3 மில்லியன் 2019ஆம் ஆண்டில் முதலாம் கட்ட வேலைகளுக்காக மீள்குடியேற்ற அமைச்சினால் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படுமென அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பொது நோக்கு மண்டபத்தினை அமைப்பதற்காக இவ்வருடம் ரூபா 7.5 மில்லியன் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தோப்பூர் சந்தியிலிருந்து அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு செல்லும் வீதி 18.4 மில்லியனிலும் அனலை தீவு கடற்கரை வீதி 10 மில்லியனிலும், நயினாதீவு இறங்குதுறைக்கு செல்வதற்கான அணுகல் வீதி 4.1 மில்லியனிலும் குட்டியபுலம் பாடசாலை வீதி தெல்லிப்பழை 6.8 மில்லியனிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கம்பெரலிய -துரித கிராமிய அபிவிருத்தி திட்டம் (ரூபா 2712 மில்லியன்), வீட்டுத்திட்டம் (ரூபா 2945 மில்லியன்), கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ரூபா 450 மில்லியன்), மீள்குடியேற்ற வேலைத்திட்டம் (ரூபா 620 மில்லியன்), பனை நிதியம் (ரூபா 222 மில்லியன்) பனைசார் அபிவிருத்தி (ரூபா 36.40 மில்லியன்), பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்டம் (ரூபா 69.3 மில்லியன்) உள்ளடங்கலாக ரூபா 7500 மில்லியனிற்கு மேற்பட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வீட்டுத்திட்டம், வீதிகள் அபிவிருத்தி, பாடசாலைகள் அபிவிருத்தி (வகுப்பறை கட்டடங்கள், திறன் வகுப்பறை, கணனி மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் கழிவறை வசதிகள்), சுகாதார சேவைகள் மேம்பாடு (Ward Complex, அத்தியாவசிய **diagnostic** உபகரணங்கள்), வாழ்வாதார உட்கட்டமைப்பு வசதிகளான நீர்ப்பாசன குளங்கள், மீன்பிடி தளங்கள் மற்றும் இறங்குதுறை அபிவிருத்தி, வலைபின்னும் நிலையம், ஏலமிடும் நிலையம், மீன்களை தரம் பிரிக்கும் நிலையம், எரிபொருள் நிலையம், மீன்பிடி இயந்திரங்கள் மற்றும் வலைகள், வாழ்வாதார உதவிகள், பனைசார் உற்பத்திகளை மேம்படுத்தும் உபகரணங்கள் (வெல்ல உற்பத்திகளை மேம்படுத்தும் உபகரணங்கள், பதனீர் மற்றும் கள்ளினை போத்தலில் அடைப்பதற்கான உபகரணங்கள், பனங்களியினை பிரித்தெடுப்பதற்கான உபகரணங்கள்), சிறுதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டு மக்கள் மயப்படுத்தப்படுகின்றன என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எனது அமைதியில் அர்த்தம் இருக்கிறது

## ஞானசாரர் விளக்கம்



(கொழும்பு)

எனது அமைதிக்குள் அர்த்தம் இருக்கின்றது எனவும், இந்தத் தேரர் இதுபற்றியெல்லாம் பேசினார் அல்லவா என நினைவுக்கு வந்தால், இந்த நாட்டிலுள்ள ஒரு பௌத்தர்கள் யாருக்கு வாக்கைப் பயன்படுத்த வேண்டும் எனத் தீர்மானம் எடுப்பார்கள் எனவும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு ஞானசார தேரர் வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் யாருக்கு ஆதரவை வழங்குகின்றீர்கள் என வினவியதற்கே தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவருக்கு வாக்களியுங்கள், இவருக்கு வாக்களிக்க வேண்டாம் என நேரடியாக எனக்குக் கூற முடியாது. இருப்பினும், எமது நாடு எதிர்நோக்கியுள்ள ஆபத்துக்கள் குறித்துப் பேசியுள்ளேன். மக்களுக்கு அது நினைவுக்கு வர வேண்டும். எனது அமைதிக்குள் அந்த அர்த்தங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் பேசிய விடயங்கள் நினைவுக்கு வந்தால் போதும், யாருக்கு வாக் களிப்பது என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

இந்தத் தீர்மானத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பு முதல் இடத்தில் காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

வகாப்வாதிகள், சலபிவாதிகள், இக்வான் முஸ்லிமூன், ஜமாஅதே இஸ்லாமி, ஜமாத் போன்ற கடும்போக்கு, விசம் கொண்ட கருத்துக்களை உடைய குழுக்கள் எந்தப் பக்கம் உள்ளன என்பதை மக்கள் பார்க்க வேண்டும். சஹ்ரான் மேற்கொண்ட தாக்குதலை மக்கள் கண்முன் எடுக்க வேண்டும். அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளது இந்த நாட்டின் இருதயத்துக்கு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படைவாதத்தை போசித்தவர்கள் யார்? அரசியல் புகலிடம் கொடுத்தவர்கள் யார்? என்பதைப் பார்க்க வேண்டும். இவ்வாறானவர்கள் எந்த அரசியல் கட்சியின் பக்கம் முகாமிட்டுள்ளனர் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தக் கட்சிக்கு வாக்களிக்க முன்னர் இரு தடவைகள் சிந்தித்துப் பார்க்க மக்கள் கடமைப்பட்டுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து 2015 வரையான காலப்பகுதியில் நாட்டில் குண்டுகள் வெடிக்கவில்லை. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் அடிப்படைவாதக் குழுக்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருந்தவர். நாம் இதுபற்றி அவரிடம் அறிவித்த போது, யுத்தம் முடிந்த கையுடன் எம்மை கொஞ்சம் ஓய்வாக இருக்க இடமளியுங்கள் தேரரே என அவர் கூறினார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் இந்த அடிப்படைவாதப் பிரச்சினையுடன் மிகவும் அவதானத்துடன் இருந்தவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விமானச்சீட்டு போலி நாமல் விளக்கம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தேர்தலில் பின்னர் அமெரிக்கா செல்லவுள்ளதாக வெளியாகியுள்ள விமானச் சீட்டு போலியானது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பிலிருந்து டுபாய் ஊடாக லொஸ் ஏஞ்ஜல் நகருக்கு செல்லவுள்ளதாக விமான சீட்டை வெளியிட்டு சமூக வலைத்தளங்களில் செய்தியொன்று பரவியுள்ளது.

எமிரேட்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானத்தின் மூலமே அவர், இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியம் குறைவாகவே காணப்படுவதாகவும், அதனாலேயே கோத்தபாய ராஜபக்ஷ தேர்தலின் பின்னர் 18ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேற முயற்சித்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் செய்தி 100 வீதம் போலியானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# க.பொ.த. சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

# கணிதம் பகுதி I


## கொழும்பு றோயல் கல்லூரி

### பகுதி A

1. 1kg பருப்பின் விலை ரூ140 எனில் 250g பருப்பின் விலை யாது?

2. தாங்கியொன்று $5m^3$ நீரைக் கொண்டுள்ளது. நீரின் கனவளவை லீற்றரில் தருக.

3.உருவில் தரப்பட்ட தகவல்களுக்கமைய y இன் பெறுமதியைக் காண்க.




4. 4m 50cm நீளமுடைய வயரொன்றை 6 சம துண்டுகளாக வெட்டினால் ஒரு துண்டின் நீளம் யாது?

5. 0.375 இனை எளிய பின்னமாக தருக.

6. $(4x-3)^2$ இனை சுருக்கி நேர் சுட்டியாக தருக.


7. 140g திணிவுடைய சவர்க்காரக் கட்டியானது 2g உறையொன்றால் சுற்றப்பட்டுள்ளது. இவ்வாறான 10 உறைகளுடன் சவர்க்காரங்களை 10g நிறையுடைய சிறிய பெட்டியொன்றில் வைக்கப்பட்டால் அப்பெட்டியின் மொத்த திணிவை kg இல் தருக.

8. $2x+12>2$, $x+5\leq 7$ எனும் இரு சமனிலிகளையும் திருப்திப்படுத்தும் இரு நிறையெண் தீர்வுகளைத் தருக.

9. 1:40 000 எனும் அளவிடைக்கமைய வரையப்பட்ட தேசப்படமொன்றில் 6cm ஆல் குறிக்கப்பட்ட உண்மையான தூரத்தை km இல் காண்க.

10. $5=10^{0.6990}$ எனில் $\log_{10} 50$ இனைக் காண்க.

11. உருவில் தரப்பட்ட தகவல்களுக்கமைய சமபருமன்களுடைய மூன்று கோணங்களை தருக.




12. தீர்க்க. 8ax4= 32

13. காரணிப்படுத்துக. $3x^2-6xy-x+2y$

14. சுருக்குக. $\frac{2-0.035}{19.6}$

15.72 $kmh^{-1}$ சீரான வேகத்தில் செல்லும் புகையிரதமொன்று 600m தூரம் பிரயாணிக்க எடுக்கும் நேரத்தைக் காண்க.

16. $\frac{6\sqrt{2}}{\sqrt{3}}$ இனை விகிதமுறு பகுதியெண்ணாக தருக.

17: உடையொன்றுக்கு குறித்த விலையிலிருந்து 12% கழிவு வழங்கப்பட்டு 528 ரூபாவாக விற்கப்படுகிறதெனில் குறித்த விலை யாது?

18. $a=\frac{p-c}{9a}$ இச் சமன்பாட்டில் a யை எழுவாயாக்குக.

19.O வை மையமாகவுடைய வட்டத்தில் AB நாண்ணாகும். $OAB=38^{\circ}$ எனில் x இனைக் காண்க.





20. $4xy$, $3x^2y$, $12x^2y$ இன் பொ.ம.சி யைக் காண்க.

21. முக்கோணி ABC இல் பக்கங்கள் AB, AC யின் நடுப்புள்ளிகள் முறையே P, Q ஆகும். AX=XP Ay=YQ எனவும் தரப்பட்டால் XY,BC யின் நீளங்களைக் காண்க. (PQ=10 cm)




22. 2y=3x-8 எனும் கோட்டிற்கு சமாந்தரமாக (0.3) எனும் புள்ளியினூடாக செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.


23. Q எனும் புள்ளியிலிருந்து R இன் திசைகோளைக் காண்க.



24. தரப்பட்ட உருவிலுள்ள ஆரைச்சிறையில் வில்லின் நீளம் 44cm எனில் உருவின் சுற்றளவைக் காண்க.



25. தரப்பட்ட உருவானது 5cm விட்டமுடைய அரைவட்டமாகும். QR=4cm எனின் PR இன் நீளத்தைக் காண்க.




### பகுதி B

01) காரியாலயமொன்றில் பணிபுரியும் ஊழியர்களில் பங்கினர் பராமரிப்பு பகுதியிலும், பராமரிப்பு பகுதியில் அல்லாத பங்கினர் நிர்வாகப்பகுதியிலும் உள்ளனர். துப்புரவாக்கல் சேவையில் உள்ளவர்களும் போக்குவரத்து சேவையில் உள்ள ஊழியர்களுக்கிடையிலான விகிதம் 4:5 ஆகும். போக்குவரத்து பிரிவிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 20 ஆகும்.

I. நிர்வாகப்பகுதியிலுள்ள ஊழியர்கள் மொத்தம் ஊழியர்களின் என்ன பின்னமாகும்?

II. துப்புரவாக்கல் சேவை மற்றும் போக்குவரத்து சேவையில் உள்ளவர்கள் மொத்த ஊழியர்களின் என்ன பின்னமாகும்?

III. துப்புரவாக்கல் சேவை மற்றும் போக்குவரத்து சேவையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது?


IV.பராமரிப்பு பகுதியிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது?

V. பராமரிப்பு, துப்புரவாக்கல், போக்குவரத்து சேவைகளில் உள்ள ஊழியர்களுக்கிடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக.

02) ஒரு சதுர வடிவ காட்போட் மட்டையானது படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு P,Q,R எனும் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு P யானது செவ்வகமாகும்.

I. வடிவங்கள் QR என்பவற்றின் கேத்திர கணிதரீதியான பெயர்களைத் தருக.

II. நீளம் a இனைக் காண்க.





III. Pயின் பரப்பு யாது?

IV. p எனும் பகுதியைப் போன்று மூன்று மடங்கு பரப்பை Q கொண்டிருந்தால் B இனைக் காண்க.

b) குறித்த பாடசாலையொன்றின் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு ஓட்டப்பந்தயத்தை நடத்துவதற்கான மைதானத்தில் உருவாக்கப்பட்ட ஓட்டப்பந்தய பாதையின் சுவடானது படத்தில் காட்டப்பட்டுள்ளது. அது ஒரு செவ்வக பகுதியையும் இரு அரைவட்டப்பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். உட்பக்கமாக உள்ள பாதையின் நீளம் 400m ஆகும்.

I.dஇன் நீளம் யாது?




II. முதல் ஒழுங்கையிலிருந்து 3.5cm தூரம் அப்பால் உள்ள இரண்டாவது ஒழுங்கையிலுள்ளவர் முழுச்சுற்றை பூர்த்தி செய்ய ஓட வேண்டிய தூரம் எவ்வளவு?

III. 400 m ஓட்டப்பந்தயத்தில் முதல் ஒழுங்கையிலிருந்து 3.5cm அப்பால் உள்ள 2ஆவது ஒழுங் கையில் ஓட இருப்பவர் முதல் ஒழுங்கையில் நிற்பவரிலும் எவ்வளவு தூரம் முன்னால் நிற்க வேண்டும்?

03) குறித்த கட்டடமொன்றிற்கு காலாண்டு வரியாக ரூபாய் 430 இனை நகரசபைக்கு செலுத்த வேண்டியுள்ளது.

I. வருட வரியாக செலுத்த வேண்டிய தொகை யாது?


II. நகரசபையானது கட்டடத்தின் மதிப்பீட்டுப் பெறுமானத்தின் 4% இனை ஆண்டு வரியாக அறவிடுமெனின் கட்டடத்தின் மதிப்பீட்டுப் பெறுமானம் யாது?

III. கட்டடத்தை வாடகைக்கு விடும் போது கிடைக்கும் வருட வருமானத்தின் 20% இனை பராமரிப்புக்கும், வரிப்பணம் செலுத்தவும் பயன்படுத்தியது போக மீதி 190,280 ரூபாய் எனில் கட்டடத்திற்கான மாத வாடகை யாது?

IV. அடுத்த ஆண்டு கட்டடத்தின் மதிப்பீட்டுப் பெறுமானம் இவ்வாண்டு மதிப்பீட்டுப் பெறுமானத்தின் $\frac{2}{100}$ பங்கால் அதிகரிக்கப்பட்டால் அடுத்த ஆண்டுக்கான கட்டடத்தின் மதிப்பீட்டு பெறுமானம் யாது?

04) உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றில் 60% ஆன உதிரிப் பாகங்கள் புதிய இயந்திரத்தாலும், மிகுதி பழைய இயந்திரத்தாலும் உற்பத்தி செய்யப்படுகின்றது. புதிய இயந்திரத்தால் செய்யப்படும் உதிரிப்பாகங்களில் பங்கு பிழையானதாகவும் பழைய இயந்திரத்தால் செய்யப்படுவதில் பங்கு பிழையானதாகவும் காணப்படுகின்றது.


I. தரப்பட்ட மரவரிப்படத்தை பூர்த்தி செய்க.




II. புதிய இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் உதிரிப்பாகம் பிழையற்றதாக இருப்பதற்கான நிகழ்தகவை காண்க.

III. பழைய இயந்திரத்தால் செய்யப்படும் உதிரிப்பாகமாக அது இருப்பதற்கான நிகழ்தகவு யாது?


b) திறமையான பாடகர்களை தெரிவு செய்யும் இறுதிச் சுற்றுப் போட்டியில் உள்ள மூன்று ஆண்கள், இரண்டு பெண்களில் முதலாம் இடமும் இரண்டாமிடமும் தேர்ந்தெடுக்கப்படுகின்றது.




I. "x" எனும் குறியீட்டை பாவித்து தரப்பட்ட நெய்யரியில் மாதிரி வெளியை பெண்களுக்கு Gl, G2 எனவும் ஆண்களுக்கு B1, B2, B3 எனவும் இடுவதன் மூலம் குறித்துக் காட்டுக.

II. இவ் நெய்யரியைப் பாவித்து ஆகக்குறைந்தது ஒரு பெண்ணாவது தெரிவு செய்யப்படுவதற்கான நிகழ்தகவை காண்க.

(05) பின்தங்கிய கிராமமொன்றிலிருந்து 20km தூரமுள்ள நகர பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றி வரும் பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்தில் வரும் 36 மாணவர்களின் நிறைகளுக்கு ஏற்ப அவர்களின் எண்ணிக்கை தொடர்பான பூர்த்தி செய்யப்படாத வட்டவரைபும் வலையுரு வரையமும் கீழே தரப்பட்டுள்ளது.




I.வட்டவரைபைக் கருத்திற்கொண்டு வலையுரு வரையத்தை பூர்த்தியாக்குக.

II. அதில் மீடிறன் பல்கோணியை வரைக.

III. 40kg-50kg எனும் ஆயிடையினுள் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது? அதிலிருந்து வட்ட வரைபில் அது வகை குறிக்கும் கோணத்தைக் காண்க.

IV) 50kg நிறையினும் கூடிய மாணவர்களின் வீதத்தை காண்க.

b) 16,10,12,11,9,13,14,18,20 எனும் தரவுத்தொகுதியின் காலணையிடை வீச்சினைக் காண்க.

(புதன்கிழமை தொடரும்...)

# போர்க்குற்றவாளியை ஆதரிப்பதை விட குற்றச்சாட்டுக்கள் இல்லாதவரை ஆதரிப்பது தமிழர்களுக்கு பொருத்தமானது

## முல்லையில் சம்பந்தன் தெரிவிப்பு

(அக்கராயன்)

**போர்க்குற்றச்சாட்டு உள்ளவரை ஆதரிப்பதைவிட குற்றச்சாட்டுகள் அற்ற சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதே தமிழர்களுக்கு பொருத்தமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்ற சஜித் பிரேமதாஸவிற்கான ஆதரவுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,தமிழ் மக்கள் அகிம்சை வழியிலும் ஆயுதப் போராட்ட வழியிலும் நீண்ட போராட்டங்களை முன்னெடுத்து இலக்குகளை அடைந்துகொள்ள முடியவில்லை.

தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியவில்லை. தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழர்கள் முயற்சி செய்து வருகின்றனர். இச்சமயத்தில்தான் ஜனாதிபதித் தேர்தல் வந்துள்ளது. இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கான முடிவுகளை எடுத்துவிட்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் மகிந்த ராஜப்க்ஷ தமிழர்களை போரில் இருந்து மீட்டு அரசியல் தீர்வுகளை வழங்குவோம் என சர்வதேசத்திற்கு கூறிவந்தார். சமஷ்டி தொடர்பான விடயாங்களையும் ஜனாதிபதியின் ஆலோசகரான ஜி.எல். பீரிஸ் மகிந்தவிற்கு ஆலோசனைகளாக வழங்கி வந்தார். ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழர்களுக்கான தீர்வு தொடர்பாக மகிந்த கதைக்கவில்லை. மகிந்த அரசினால் கொலைகள், மனித உரிமை மீறல்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் என பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்தன.

இவை எல்லாம் நிகழ்ந்த போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷ தற்போது ஜனாதிபதி வேட்பாளராக வந்திருக்கின்றார். போர்க் குற்றச் சாட்டுக்கு உள்ளாகியுள்ளவருக்கு எப்படி தமிழர்கள் வாக்களிப்பது. எந்தவித குற்றச்சாட்டுகளும் அற்ற சஜித் பிரேமதாஸவிற்கு தமிழர்கள் வாக்களிக்க வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் சஜித் பிரேமதாஷவிற்கு வாக்களிப்பதன் மூலம் மகிந்தவின் சூழ்ச்சிகளை முறியடிக்கக் கூடிய நிலைமை உருவாகும் என மேலும் தெரிவித்தார். (9-350)

## ஆத்திக்குழி குளக்கட்டு வீதி புனரமைப்பு

(கண்டாவளை)

மன்னார் நானாட்டான் பகுதியில் மக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட ஆத்திக்குழி குளக் கட்டு வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் நானாட்டான் பிரதேசத்திற்குட்பட்ட ஆத்திக்குழி குளக்கட்டு வீதி மக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்தமுடியாத நிலையில் சேதமடைந்து காணப்பட்டதுடன், குறித்த வீதியை நாளாந்தம் நூற்றுக்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்படி வீதியை முன்னுரிமைப்படுத்தி புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வீதியானது புனரமைக்கப்பட்டு வருகின்றது.அதாவது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி குழுக்களின் அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் சிபாரிசுக்கு அமைவாக சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் 550 மீற்றர் நீளமான ஆத்திக்குழி குளக்கட்டு வீதி கொங்கீறிட் வீதியாக புனரமைக்கும் பொருட்டு இதற்கான பணிகள் கடந்தமாதம் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (9-315)




# நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி தொடர்ந்தும் ஏமாறப் போகிறீர்களா?

## சிவாஜிலிங்கம் கேள்வி



(குருமன்காடு)

எமது தலைவர்கள் எதிரியின் காலை முத்தமிட்டு, நிற்கிறார்கள். நிபந்தனையில்லாமல் இவர்கள் ஆதரவு வழங்குவது தான் ஏமாற்றமாக உள்ளது. ஏமாற்றிவிட்டான் என்கிறீர்கள். தொடர்ந்து ஏமாற்ற விடப்போகிறீர்களா?என ஜனாதிபதி வேட்பாளர் எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையின் பௌத்த பேரினவாத வெற்றியாளன்? யார் என்ற போட்டி நடக்கிறது. இதில் தென்னிலங்கை கட்சிகளின் ஏஜெண்ட்கள் எல்லாம் இங்கும் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளன. கடந்தமுறை ஆஹா ஓஹோ என அன்னப்பட்சியை சொன்னவர்கள் இந்தமுறை ஒளிந்து ஓடிப்போய், அன்னப்பட்சி இப்போது சுவாசிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

சிங்களவர்கள் தமது தலைவரை தீர்மானிக்கட்டும். நாம் எமது வழியை பார்ப்போம். ரிஷாட் பதியுதீன் வன்னியில் இவ்வளவு கொடுமைகளை செய்கிறார். நீங்கள் அன்னப்பட்சிக்கு அளிக்கும் வாக்கு ரிஷாட்டிற்கு அளிக்கும் வாக்கு. இந்தப்பக்கம் கோத்தாவிற்கு அளிக்கும் வாக்கு மஸ்தானிற்கு அளிக்கும் வாக்கு.

மனோ கணேசன் சொல்கிறார் வன்னி மண்ணின் மைந்தன் ரிஷாட் என. அப்படியானால், மிச்சமான நாங்கள் எல்லோரும் வன்னி மாடுகளா?. ரிஷாட் வன்னியின் மைந்தன். நாங்கள் மாடுகள். நாங்கள் எருமைத்தோல் படைத்தவர்கள். உங்களின் எந்த தாக்குதலையும் எதிர்கொள்வோம். அதை மக்கள் இந்த தேர்தலில் காட்ட வேண்டும்.

நாம் சர்வதேச ரீதியில் இன ரீதியான, மதரீதியான சிறுபான்மையினர் தாக்கப்படக்கூடாது என்ற மீளநிகழாமையைத்தான் கோருகிறோம். 2015இல் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டது. இன்று கணக்கெடுக்கவில்லை.

எங்கள் மக்களை காப்பாற்ற வேண்டிய தேவை எமக்கிருக்கிறது. ஆனால் எமது தலைவர்கள் எதிரியின் காலை முத்தமிட்டு நிற்கிறார்கள்.

ஐந்து கட்சிகள் கூட்ட தீர்மானத்தை வேட்பாளர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பு சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அதை யாரிடமும் ஒப்படைக்கவில்லையென சுமந்திரன் சொல்லியுள்ளார். அப்படியென்றால் என்ன சுத்துமாத்திற்கு ஐந்துகட்சிகள் என கையெழுத்திட்டீர்கள். பல்கலைக்கழக மாணவர்களையும், தமிழ் மக்களையும் முட்டாள்கள் என்றா நினைத்தீர்கள்?

விக்னேஸ்வரன் தன்னால் முடிந்ததை செய்தார். இந்த கடிதங்களை வேட்பாளரிற்கு அனுப்பியிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். தமிழ் அரசு கட்சி, ரணிலை, சஜித்தை ஆதரிப்பதென்பது எப்பொழுதே முடிந்த முடிவு. ஒருவேளை, சஜித்தை தோற்கடிக்கும்படி ரணில் சொன்னால், அதையும் செய்வார்கள். அதற்காகத்தான் இப்பொழுது பகிரங்கமாக அறிவித்தல் விடுத்தார்களோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம் என மேலும் தெரிவித்தார். (9-250)

## பொதுநலனை மேம்படுத்துவதற்காக பொருத்தமான தலைவரை தேர்ந்தெடுங்கள்

### மன்.மறைமாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு

(மன்னார்)

தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகள், கடமைகள் மட்டில் கவனம் செலுத்தி, பொதுநலனை மேலும் மேம்படுத்துவதற்காக பொருத்தமான தலைவரை தேர்ந்தெடுங்கள் என மன்னார் மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில்,

ஜனாதிபதியை தெரிவுசெய்வது குறித்து மறைமாவட்ட மக்கள் புத்திசாலித்தனமாகவும், தைரியமாகவும் செயற்படுவதுடன், தெரிவுசெய்யும் வேட்பாளர் நாட்டினதும், எமது மறை மாவட்டத்தினதும், தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும், சகல மக்களினதும் சமத்துவ வாழ்வையும் சமய சுதந்திரத்தையும் அனைத்து மக்களுடனும் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும். தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் மற்றும் ஜனநாயக கொள்கைகளை நிலைநிறுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு உழைக்கும் வேட்பாளரையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு அன்று எமது கத்தோலிக்க மக்கள் அனுபவித்த மிலேச்சதனமான தாக்குதலை கருத்தில் கொண்டு எமது நாட்டில் மத வாதம் மற்றும் இனவாதம் ஒழிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகை யில் சுயநிர்ணயத்தோடு உழைக்கவும், எமது நாட்டில் உள்ள இன மத மக்களிடையே சக வாழ்வு ஏற்படவும் வழிசமைக்கக்கூடிய தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

மத சுதந்திரம் நாட்டு மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் மற்றும் தமிழ் மக்களுடைய தகுதி மிக்க கோரிக்கைகள் ஆகியவற்றை மையப்படுத்திய கொள்கை திட்டமிடலுடன் அடுத்த தலைமுறைக்கு சேவை செய்வதற்கும், நாட்டின் நிலையான வளர்ச்சி மற்றும் அனைத்து மதத்தவர், இனத்தவரின் சமத்துவத்தை உறுதி செய்வதற்கு வழிவகுக்க வேண்டும்.

கொடிய யுத்தம் முடிவுற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் தமிழர்களாகிய எமது கோரிக்கையை, முன்னுரிமைப்படுத்தி அரசு சிந்தித்து செயற்பட வேண்டுமென முன்வைத்திருந்தோம். தேர்தலின் பின்பாக நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டதன் பின்பும், எமது எதிர்பார்ப்பு நிறைவேறுமென நம்பியிருந்தோம்.

ஆனால் இதுவரை எந்தவித பலனும் எமக்குக் கிடை க்கவில்லை. குறிப்பாக வடக்கு- கிழக்கு பகுதியில் தமிழ் மக்களு டைய அனைத்து கோரிக்கைகளுக்கும்விசேட கவனம்செலுத்தும்வகையில் கீழ் காணப்படும் விடயங்களில் காணாமல் ஆக்கப்பட்டோர் நிலைபற்றி ஆக்கபூர்வமான முடிவினை உடனடியாக எடுத்தல்.அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான உடன் முடிவு எடுத்தல், ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களை காலதாமதமின்றி விடுவித்தல், புனர்நிர்மாண அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியவர், இவ்வாறான ஒருவருக்கு எம் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

எனவே தங்கள் வாக்குகளைச் சுதந்திரமாகப் பயன்படுத்த வேண்டும் எனவும், வாக்களிப்பது ஒவ்வொருவரினதும் பொறுப்புமிகு கடமை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

## கஞ்சாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி சேவியர்கடை சந்தி பகுதியில் 16 கிலோ கேரளக் கஞ்சாவுடன் அம்பாள்குளம் பகுதியை சேர்ந்த ஒருவர் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அப்பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபரிடமிருந்து 16 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா மற்றும் சந்தேக நபரை மாங்குளம் பொலிஸார் கிளிநொச்சி பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (9-100)

# மகிந்தவின் முல்லை வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு )

ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுஜனபெரமுன தேர்தல் பரப்புரைக்கூட்டம் நேற்று முல்லைத்தீவில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷின் முல்லைத்தீவு வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெள்ளைவான் முதலாளியே வெளியேறு, எங்களுடைய உறவுகள் எமக்குவேண்டும், ஓ. எம்.பி வேண்டாம், ஆறாயிரம்ரூபாய்வேண்டாம், தேர்தலில் வாக்களிக்கமாட்டோம் என பலவேறு கோசங்களை எழுப்பி, கதறி அழுது அவர்கள் போராட்டத்தில் ஈடுட்டனர்.(9)

# முல்லையில் பொதுஜன பெரமுனவின் பிரசாரக் கூட்டம் - மகிந்த பங்கேற்பு





(பனிக்கன்குளம்)

ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுஜன பெரமுனவின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் நேற்று முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கனகரத்தினம், பிரபாகணேசன், முன்னாள் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, முன்னாள் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜ பெருமாள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (9-281)

# களை நாசினிகளால் நெற்பயிர்கள் பாதிப்பு

## விவசாயிகள் அவதானமாகச் செயற்பட வேண்டுமென அதிகாரிகள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

களைநாசினிகளால் நெற்பயிர்கள் அதிகளவு பாதிப்படுவதாக விவசாயிகளால் முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் நெற்பயிர்களுக்கு களைநாசினிகளை விசிறுவதில் மிக அவதானமாக செயற்படுமாறு கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கையானது ஆரம்பித்து நெற்பயிர் நாற்றுப்பருவத்தில் காணப்படுகிறது.

விவசாயத் திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட 3 மாத நெல்லினங்களும் குறிப்பிடத்தக்களவு பாரம்பரிய நெல்லினங்களுமாக சுமார் 28000 ஹெக்டயர் நிலப்பரப்பில் பாரிய, நடுத்தர மற்றும் சிறிய குளங்களின் கீழும் மானாவாரியாகவும் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

களைகளின் துரித வளர்ச்சியினை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட களைநாசினிகளையும் விவசாயிகள் விசிறிவருகின்றனர். இருந்தாலும் சில பிரதேசங்களில் விசிறப்படும் களைநாசினிகளால் நெற்பயிர்கள் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் முறையிட்டுள்ளனர்.

குறிப்பாக "லோயன்ட்" எனும் களைநாசினி விசிறப்படும் சந்தர்ப்பத்தில் நெற்பயிர்கள் விறைத்தது போன்று இலைகள் சுருளடைந்து காணப்படுவதாக விவசாயிகள் முறையிட்டு வருகின்றனர், அதிலும் "கீரிசம்பா"என விவசாயிகளால் அழைக்கப்படும் Bg 360 எனும் 3 1/2 மாத வயதுடைய வெள்ளைசம்பா இனம் அதிகம் பாதிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த களைநாசினியினை கீரிசம்பா நெல்வர்க்கத்துக்கு விசிறுவதை தவிர்க்குமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (9)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

கருகாம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்தும் வன்னி மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் கரைச்சி பிரதேசசபை மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த 100 மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கி வைக்கப் படவுள்ளது. (9)

# வன்னேரிக்குளம் திறப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் காலபோக நெற்செய்கைக்காக கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. குளத்தின் கீழ் 363 ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் குளத்தின் நீர் திறக்கப்பட்டுள்ளது. வன்னேரிக்குளத்தின் தென்பகுதி ஊடாக குளத்தின் நீர் வெளியேறியதால் வன்னேரிக்குளம் விவசாயிகள் 1,700 வரையான மண் மூடைகள் அடுக்கி நீர் வெளியேறாது தடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-350)

# மாவீரர்களை நினைவுகூரும் புனித மாதத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் 2100 மரங்கள் நடுகை

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் மரநடுகை மாதத்தில் 2100 மரங்களை நடுகை செய்யவுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய மர நடுகை மாதத்தில் வருடாந்தம் மரநடுகை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நவம்பர் முதலாம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்படும் மேற்படி மரநடுகை மாதத்தில் பல்வேறுபட்ட அமைப்புக்கள் பொது மக்களால் மரநடுகை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது ஆரம்பமாகியுள்ள இந்த மரநடுகை மாதத்தில் கரைச்சிப்பிரதேச சபையினால் மரநடுகை முன்னெடுக்கப்படவுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் வரலாற்றில் உயிர் தியாகங்களை செய்த மாவீரர்களை நினைவுகூரும் இந்த புனித மாதத்தில் இந்த மரநடுகை முன்னெடுக்கப்படுவது வழக்கம்.

கரைச்சிப் பிரதேச சபையினால் இந்த வருடத்திலும் இந்த மரநடுகை மாதம் முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த வகையிலே கரைச்சிப் பிரதேச சபையின் 21 வட்டாரங்களிலும் 100 மரக்கன்றுகள் வீதம் 2100 மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# இலவச கணனிக்கூடம் திறப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி மலையாளபுரம், பாரதிபுரம் பிரதேச மாணவர்களின் நலன்கருதி கிராமங்களுக்கு கணனி அறிவை கொண்டு செல்லும் செயற்றிட்டத்திற்கு அமைவாக இலவச கணனிக்கூடம் அண்மைமயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அப்பாப்பிள்ளை ருக்மணி நவரட்ணா ஞாபகார்த்த இலவச கணனிக் கூடமானது பாரதிபுரம் மலையாளபுரம் விஞ்ஞானக் கல்வி நிலைய வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அமெரிக்காவில் வசிக்கின்ற மருத்துவர் இந்திரா மற்றும் தேவராணி ஆனந்த சபாபதி ஆகியோரின் பங்களிப்பில் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மருத்துவர் இந்திரா மற்றும் தேவராணி ஆனந்தசபாபதி உலக சுகாதார மருத்துவ நலச்சங்கத்தினை சேர்ந்த முரளி இராமலிங்கம் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் செயலாளர் ஸ்ரீகௌரிபால, அதன் உப தலைவர் வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் அ. பங்கையற்செல்வன் மற்றும் கல்வி நிலையத்தின் நிர்வாகி தீபன், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-350)




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் நினைவு தினம் வவுனியா வைரப்புளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட மூத்த சட்டத்தரணியும் மாவட்ட அபிவிருத்திச்சங்கத் தலைவரும் அமரர் சிவசிதம்பரத்தின் திருவுருவச்சிலையை நிறுவியவருமான முருகேசு சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், வவுனியா வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் எஸ்.தணிகாசலம், நகரசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்:-நெளுக்குளம் செய்தியாளர்)

# பாரதம்

## அயோத்தி தீர்ப்பு இந்திய நீதித்துறை வரலாற்றில் ஒரு பொன்னான தருணம் -பிரதமர் மோடி பெருமிதம்



(டில்லி)

அயோத்தி தீர்ப்பு இந்திய நீதித்துறை வரலாற்றில் ஒரு பொன்னான தருணம் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

அயோத்தி தீர்ப்பு குறித்து பிரதமர் மோடி நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நாட்டு மக்களிடம் உரையாற்றினார்.

இதன்போது அவர் கூறியதாவது, "நாடே எதிர்பார்த்த வழக்கில் தீர்ப்பு வந்துள்ளது. என் மனதில் இருப்பதை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அயோத்தி வழக்கில் தீர்ப்பு வெளியானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணம். நீதி, நியாயம் மீது மக்களுக்கு நம்பிக்கை வலுப்பெற்றுள்ளது.

மாரத்தான் விசாரணைக்குப் பின்பு தீர்ப்பு வந்துள்ளது. ஒட்டு மொத்த தேசமும் இந்த தீர்ப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. வேற்றுமையில் ஒற்றுமையே நமது தாரக மந்திரம்.

மக்களாட்சி வலிமையாக தொடர்கிறது என்பதை இந்தியா காட்டியுள்ளது. நமது ஜனநாயகம் எவ்வளவு வலுவானது என்பதை உலகம் கண்டுள்ளது.

இந்தியாவின் வலிமையான அமைப்பு உச்ச நீதிமன்றம் என்பது இன்று மீண்டும் நிரூபணம் ஆகியுள்ளது. கர்தார்பூரில் புதிய வழித்தடம் திறக்கப்பட்டுள்ளது போல், இங்கேயும் புதிய பாதை திறக்கப்பட்டுள்ளது.

அயோத்தி வழக்கில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பை அனைவரும் ஏற்றுள்ளமை இந்தியாவின் சகிப்புத் தன்மையை உணர்த்துகிறது.

புதிய இந்தியாவில் எதிர்மறை எண்ணங்களுக்கு இடமில்லை. வேற்றுமையும் எதிர்மறை எண்ணங்களும் மறைந்த தினம் இன்று. தேசத்தை கட்டமைக்கும் பொறுப்பு ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு" என தெரிவித்தார். (இ-2)

## மதங்களைக் கடந்த மனிதநேயம் அயோத்தி தீர்ப்பு குறித்து வைகோ

(சென்னை)

மத நல்லிணக்கம் சீர்குலைய வழிவகுத்துவிடாமல், எதிர்காலத்தில் சமூக அமைதியை நிலைநாட்டும் கடமை அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளது என அயோத்தி தீர்ப்பு குறித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.


நீண்டகாலமாக நிலுவையில் இருந்த அயோத்தி நில விவகார வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது குறித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்ட அறிக்கையில், இந்திய நாட்டின் கோடானகோடி மக்களின் மனதில் கவலை ஊட்டிய பாபர் மசூதி பிரச்சினைக்கு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

90-களின் தொடக்கத்தில் பாபர் மசூதி இடிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு திரண்டு, பாபர் மசூதியை இடித்துத் தகர்த்ததை தவறு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் கூறி இருக்கிறது.

பாபர் மசூதி இருந்த இடத்தில் அதற்கு முன்பு கோயில் இருந்ததற்கான ஆதாரம் துல்லியமாகக் காட்டப்படவில்லை என்றும் கூறி இருக்கிறது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இயக்கத்தின் அகில இந்தியத்




தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வோம் என்று நான்கு நாட்களுக்கு முன்பே கூறினார்.

மதச்சார்பின்மைக் கோட்பாட்டைத்தான் இந்திய அரசியல் சாசனம் வலியுறுத்துகிறது என்பதையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

சிறுபான்மை மக்களுக்கு அரணாக நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இருப்பதை கடந்தகால வரலாறு காட்டுகிறது. மதங்களைக் கடந்த மனிதநேய உணர்வு இந்த மண்ணில் கலந்து இருக்கிறது.

எனவே மத நல்லிணக்கம் சீர்குலைய வழிவகுத்துவிடாமல், எதிர்காலத்தில் சமூக அமைதியை நிலைநாட்டும் கடமை அனைத்துத் தரப்பினருக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். (2)

## கர்தார்பூர் பாதை திறப்பு; ஐ.நா.வரவேற்பு



(ஜெனிவா)

இந்தியா, பாகிஸ்தான் இடையே கர்தார்பூர் பாதை திறக்கப்பட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் வரவேற்றுள்ளார்.

சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக், தனது வாழ்வின் கடைசி 18 ஆண்டுகளை பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கர்தார்பூரில் கழித்தார். அங்கு அவரது நினைவாக கர்தார்பூர் சாகிப் குருத்வாரா அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சீக்கியர்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது சென்று வருவது கடமையாக உள்ளது.

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் இருந்து 3 கி.மீ. தொலைவில் இந்த கர்தார்பூர் சாகிப் குருத்வாரா உள்ளது.


இதற்காக சீக்கிய பக்தர்கள், சென்று வருவதற்கு வசதியாக இரு நாடுகளுக்கு இடையே, 3 கி.மீ., தூரத்துக்கு சாலை அமைக்கும் திட்டத்தை, இரு நாடுகளும் செயற்படுத்தியுள்ளன.

பஞ்சாப் மாநிலத்தின் கர்தார்பூரில் உள்ள தேரா பாபா நானக் குருத்வாராவிலிருந்து, பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள குருத்வாராவுக்கு இந்த சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த சாலையை யாத்திரிகர்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி நேற்று பங்கேற்றார்.

இந்நிலையில், சீக்கியர்கள் புனித யாத்திரை செல்ல அமைக்கப்பட்ட பாதை முறைப்படி திறக்கப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் வரவேற்றுள்ளார்.

இதுதொடர்பாக அவரது செய்தி தொடர்பாளர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், கர்தார்பூர் வழித்தடம் எனும் பெயரில் இந்தியா-பாகிஸ்தான் இடையே புதிய எல்லை வழி திறக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

குருநானக்கின் 550வது பிறந்த தினத்தின்போது எல்லை தாண்டி கர்தார்பூர் செல்லும் யாத்திரிகர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் எனப் பதிவிட்டுள்ளார். (2)



## ஈராக்கில் ... உயிரிழந்...

(பக்தாத்)

ஈராக்கில் அரசு...
போராட்டத்தில் இதுவ...
300 ஆக உயர்வ...

வேலைவாய்ப்பு வழங்க வேண்டும், ஊழலை ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வீதிகளில் இறங்கி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தலைநகர் பக்தாத் உட்பட நாட்டின் பல... பெ... ஈடு... கிச...

## அழிவை ஏற்ப...

### மூவர் பலி; ... 15...

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக இதுவரை 3 பேர் உயிரிழந்தனர்.

4 பேர் காணாமல் போயுள்ளதுடன், 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மேலும் 150இற்கும் அதிகமான வீடுகள் காட்டுத் தீ காரணமாக எரிந்து சாம்பலாகின.

இந்நிலையில் 1300 தீயணைப்பு படை வீரர்கள் தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீவிரமாக இறங்கினர். அவர்களுக்கு உதவும் பொருட்டு பிரதமர் ஸ்கொட் மொரிசன் பாதுகாப்பு படையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

காட்டுத் தீ பரவலைத் தொடர்ந்து சௌத் வேல்ஸ் மற்றும் குயின்ஸ்லாந்து பகுதிகளில் பொதுமக்களுக்கு பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலியாவின்



தீய... கை...

திய...

## "பு... பங்க...

(டாக்கா)

'புல்புல்' பு... மீன்பிடிக்கச் ... காணவில்லை... பர்குனா மற்று... மீனவர்களை ...

இந்நிலையி... களை மீட்டு த... அமைக்கப்பட்...

இதுவரை 1... ட்டு முகாம்கள... பணியில் 55 ...

# வெளிநாடு

# ...தில் வலுப்பெறும் மக்கள் போராட்டம்

## ...ந்தோர் எண்ணிக்கை 300 ஆக உயர்வு

**அரசுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் ... இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ...பர்வடைந்தது.**


பல்வேறு இடங்களில் போராட்டம் நடைபெற்றது. இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

பல்வேறு காரணங்களால் கடந்த ஒரு மாதத்தில் 300இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட நிலையில், 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் காயமடைந்துள்ளனர். (2)



# ...ற்படுத்தும் அவுஸ்திரேலிய காட்டுத்தீ

## ...லி; 30இற்கும் மேற்பட்டோர் காயம் 150 வீடுகள் தீயில் நாசம்



தீயணைப்பு அதிகாரிகள் குறிப்பிடுகையில்,

அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் கடந்த சில நாட்களாக ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக இதுவரை 3 பேர் உயிரிழந்தனர்.

தொடர்ந்து காட்டுத் தீ ஏற்பட்ட இடங்களில் ஹெலிகொப்டர்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, "காட்டுத் தீ காரணமாக ஆயிரக்கணக்கான ஹெக்டெயர் அளவிலான காடுகள் நாசமாகியுள்ளன. இதனால் வனவிலங்குகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

வனப்பகுதிகளில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக வனவிலங்குகளின் வாழ்வாதாரம் ஒவ்வொருநாளும் குறைந்து கொண்டே வருகிறது" என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மைக்காலங்களில் அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட மோசமான காட்டுத்தீ இதுவென அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (2)

# ...புல்புல்" புயல் தாண்டவம்

## ...ங்களாதேஷில் 150 மீனவர்களை காணவில்லை

(...க்கா)

...ல்புல்' புயலால் சீற்றமுடன் காணப்படும் கடலில் ...டிக்கச் சென்ற 150 பங்களாதேஷ் மீனவர்களை ...வில்லை. கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற போலா, ...ா மற்றும் பத்துவாகாளி ஆகிய பகுதிகளை சேர்ந்த 150 ...ர்களை நேற்றிரவு முதல் காணவில்லை.

...ந்நிலையில், கடலோர மாவட்டங்களில் இருந்து குடிமக் ... மீட்டு தங்க வைப்பதற்காக நிவாரண முகாம்கள் ...க்கப்பட்டுள்ளன.

...துவரை 19 இலட்சம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்ப... ...காம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்தப் ...ில் 55 ஆயிரம் தன்னார்வத் தொண்டர்கள் ஈடுபட்டு



வருகின்றனர்.

வங்கக்கடலில் அந்தமான் அருகே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை புதிய புயலாக வலுப்பெற்றது. இந்தப் புயலுக்கு 'புல்புல்' எனப் பெயரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஆபிரிக்காவில் மின்னல் தாக்கி அறுவர் பலி; பதினொருவர் காயம்

(அடிஸ்அபாபா)

ஆபிரிக்கக் கண்டத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது உகண்டா. செப்டம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை மழைப் பொழிவு பெறுகிறது. தற்போது அங்கு பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள படேர் மாவட்டத்தின் டோபி கிராமத்தில் இறந்த ஒருவருக்கு நேற்று இரவு இறுதிச்சடங்கு நடைபெற்றது. சுமார் 20 பேர் இரவு முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக்காலை மழை பெய்யத் தொடங்கியதால் அருகிலிருந்த மரத்திற்கு அடியில் அனைவரும் ஒதுங்கி நின்றனர். இடி, மின்னலுடன் மழை தீவிரமடைய தொடங்கியது. இதையடுத்து திடீரென மின்னல் தாக்கியதில் அங்கிருந்த 6 பேர் பலியாகினர். 11 பேர் படுகாயமடைந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர். (2)

# பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி விடுதலை

(பிரேசிலியா)

ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா விடுதலை செய்யப்பட்டார்.

பிரேசிலின் உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

குற்றவாளி என தீர்ப்பு அளிக்கப்படும் போது, அந்த தீர்ப்பை எதிர்த்து அவர்கள் உள்ளூர் நீதிமன்றில் 3 முறையும், சுபீரியர் நீதிமன்றில் ஒரு முறையும், இறுதியாக உச்ச நீதிமன்றிலும் மேன்முறையீடு செய்ய வாய்ப்புகள் வழங்கப்படும்.

இந்த வாய்ப்பு வழங்கப்படாமல் லூயிஸ் சிறையில் அடைக்கப்பட்டதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படி அவரை சிறையில் அடைத்தது அரசியல் சாசன கொள்கைக்கு எதிரானது என அந்த நீதிமன்றம் கூறியுள்ளது.

இதையடுத்து அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்பு உருவானது. கியூரிடிபா மத்திய பொலிஸ் தலைமையகத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த அவர் விடுதலை செய்யப்பட்டார். அவரை அவரது ஆதரவாளர்கள் பெருந்திரளாக வந்து வரவேற்று அழைத்து சென்றனர். பிரேசில் முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா மீது ஊழல் மற்றும் சட்டவிரோத பணப் பரிமாற்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இது தொடர்பான வழக்கை விசாரித்த அந்நாட்டின் நீதிமன்றம் அவர் குற்றவாளி எனத் தீர்மானித்து 8 ஆண்டுகளும், 10 மாதமும் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

இதன் காரணமாக அவர் அங்கு கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட முடியாமல் போனது. ஜனாதிபதி தேர்தலில் அவர் கருத்துக் கணிப்புகளில் முன்னிலை வகித்த போதும், முதல் சுற்றில் வெற்றிபெற வாய்ப்புள்ள ஒரே வேட்பாளர் எனக் கூறப்பட்டபோதும், தேர்தலில் நிற்க முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது. (2)

"யார் வெற்றி பெற்றாலும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்"

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மட்டக்களப்பில் கவனயீர்ப்புப் போராட்டம்

(ஏறாவூர்)

**யார் வெற்றி பெற்றாலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வோம் எனும் தொனிப்பொருளில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஈடுபட்டனர்**



காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் மட்டக்களப்பு - திருமலை வீதியில் ஆரம்பித்து நகர் மணிக்கூட்டு கோபுரம் வரை சென்று அங்கிருந்து மத்திய பேருந்து நிலையத்திற்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வோம் உண்மை, நீதி, இழப்பீடு, 6 ஆயிரம் ரூபா இடைக்கால கொடுப்பனவு மீள இடம்பெறாமை போன்ற சுலோகங்கள் மற்றும் காணமல் போன உறவுகளின் புகைப்படத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(இ-7)

# எதிர்காலம் மகிந்தவின் கையில்தான் என்பதை மு.கா.தலைவர் ஹக்கீம் தீர்மானித்து விட்டார்

## பஷீர் சேகுதாவூத் சுட்டிக்காட்டு

(கொழும்பு)


எதிர்காலம் மகிந்த ராஜபக்ஷவின் கையில்தான் இருக்கின்றது என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தீர்மானித்து விட்டார், ஆகவேதான் முஸ்லிம் காங்கிரஸ் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்பது மகிந்த ராஜபக்ஷ என்பவரை எதிர்ப்பது ஆகாது என்று அம்பாறையில் அவர் கூறினார் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளரும் உற்பத்தி திறன்கள் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

கோத்தாவுக்கு ஆதரவாக கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருதில் நடத்திய பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெரும்பான்மை சிங்களவர்களும் சரி, தமிழர்களும் சரி முஸ்லிம் சமூகத்துக்கு எந்த வகையிலும் எதிரானவர்கள் அல்லர். இஸ்லாமிய மார்க்கமோ, குர்ஆனோ, ஹதீஸோ அவர்களின் பிரச்சினை அல்ல. அவர்கள் கேடுகெட்ட காவாலித்தனமான முஸ்லிம் அரசியல் தலைமைகளையே பிரச்சினையாகப் பார்க்கின்றனர். அஷ்ரப் போன்ற முஸ்லிம் தலைவர்களை சிங்கள மக்கள் பெரிதும் நேசித்தார்கள். இன்றைய முஸ்லிம் தலைவர்களை அரசாங்கத்தினதும், மக்களினதும் பணத்தை சூறையாடுபவர்களாகவே பார்க்கின்றனர். அன்றைய எமது தலைவர்களுக்கு அரசாங்கத் தலைவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். அந்தக் காலம் மலையேறி விட்டது. இன்று ரவூப் ஹக்கீம் எழுந்து நின்று மரியாதை செலுத்துவதோடு கைகட்டிக்கொண்டு நிற்கின்றார். சஜித் பிரேமதாஸவும் சரி, கோத்தபாய ராஜபக்ஷவும் சரி இரு பிரதான விடயங்களையே நாட்டு மக்கள் முன்னிலைக்கு வைத்திருக்கின்றார்கள். ஒன்று நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பது. மற்றையது நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது. சிங்கள பெரும்பான்மை மக்களில் அதிகமானவர்களினதும், தமிழ் பேசும் சிறுபான்மை மக்களில் குறைவானவர்களினதும் வாக்குகளை பெறுகின்ற ஒருவர் மாத்திரமே இந்நாட்டு ஜனாதிபதியாக நிச்சயம் வர முடியும். மாறாக தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் அதிகபடியான வாக்குகளையும், சிங்கள பெரும்பான்மை மக்களுக்குள் இருந்து குறைவானவர்களின் வாக்குகளையும் பெறுகின்ற ஒருவர் நிச்சயமாக ஜனாதிபதியாக வரவே முடியாது. எனவே சிங்கள மக்களின் விருப்பமும், தெரிவுமே முஸ்லிம் மக்களின் விருப்பமாகவும் தெரிவாகவும் இருக்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இந்நாட்டில் தமிழர்கள் மேற்கொண்ட 30 வருட யுத்தம் காரணமாக நாடு அபிவிருத்தியடையாமல் அழிந்து விட்டது என்கிற எண்ணம் சிங்கள மக்களுக்கு இருக்கின்றது. யுத்தம் முடிந்த நிலையில் நாடு அபிவிருத்தியடையும் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் சஹ்ரான் என்பவன் வந்து எல்லா இன மக்களின் தலைமீதும் குண்டு வைத்து விட்டான்.

30 வருட கால அழிவை சஹ்ரான் ஒருநாளில் நிகழ்த்தி விட்டான் என்றே சிங்கள மக்கள் சிந்திக்கின்றார்கள். முஸ்லிம்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றார்கள்.



இந்நிலை மாற வேண்டுமானால் சிங்கள மக்களின் கனவே முஸ்லிம் மக்களின் கனவாகவும் இருக்க வேண்டும். ஆகவே அதற்கான நமது தெரிவு எது? என்பதை நாம் சரியாக தீர்மானிக்க வேண்டும். முட்டாள்தனமான முஸ்லிம்கள் தலைமைகளால் அதற்கான சரியான தீர்மானத்தை எடுக்க முடியவில்லை.

ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலும், சாய்ந்தமருது மக்களும் எடுத்த தீர்மானம் முஸ்லிம் சமூகத்துக்கு ஆபத்தானது என்று ரவூப் ஹக்கீம் பிதற்றுகின்றார். அவ்வாறு விமர்சிப்பதற்கு அவருக்கு எந்த அருகதையும் கிடையாது. ஏனென்றால் அவரை முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக முதன்முதல் அரியணையில் ஏற்றியது சாய்ந்தமருது மண்ணேயாகும். புதிய தொடக்கம் ஒன்று மீண்டும் இம்மண்ணில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்கள் கோத்தபாய ராஜபக்ஷவின் மொட்டு சின்னத்துக்கு ஒருமித்து நின்று அமோக வாக்குகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மரியாதை

அந்தக் காலத்திலே அஹிம்சைக்கு மரியாதை அதிகமாக இருந் தது மாதிரியும் இந்தக் காலத்திலே அஹிம்சைக்கு அதிகமாக மரியாதை இருக்கிறது மாதிரியும் தெரிகிறது. ஒரு பெரியவர் இருந்தார். உண்மையைப் பற்றியும் சத்தியத்தைப் பற்றியும் நிறைய உபதேசம் செய்தார். அதன் படி நடந்தார்.

அவர் பின்னால் நிறையக் கூட்டம் இருந்தது. சீடர்கள் அதிகமாக இருந்தார்கள். அவர் கொள்கைக்கு மரியாதை இருந்தது. ஆனால் காலப்போக்கிலே அந்த மரியாதை குறைந்து போனது. அவர் பின்னால் இருந்த கும்பலும் குறைந்து போனது. இது ஏன்?

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார் ஒருவர். அதற்கு பதில் சொல்ல வந்தார் ஒருவர். அவர் ஒரு கதையைச் சொன்னார். சீக்கிய குட்டிக் கதை.

மகான் குருநானக் உபதேசம் செய்து கொண்டிருந்த காலம். அவர் பின்னால் நிறையக் கூட்டம். போகிற இடமெல்லாம் மக்கள் வெள்ளம். அவர் எந்த இடத்திற்குப் போனாலும் அவர் பின்னாலே போனார்கள்.

இந்தக் கூட்டத்தையும் அவர்களிடம் இருக்கிற ஆர்வத்தையும் பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டுப் போனார் ஒருவர். அவர் குருநானக்கினுடைய நண்பர். அவர் நேராகச் சென்று குருநானக்கைப் பார்த்தார்.

ஆஹா உனக்கு எத்தனை ஆயிரம் சீடர்கள் என்றார். குருநானக் இதைக் கேட்டு லேசாகச் சிரித்தார். அவ்வளவு தான் பதில் எதுவும் சொல்லவில்லை. சிறிது நாள் கழித்து குருநானக் ஒரு ஊரை விட்டு இன்னொரு ஊருக்குப் புறப்பட்டார். ஆயிரக் கணக்கான சனங்கள் பின்னாலே போனார்கள். சும்மா போகவில்லை குருமகாராஜ் கி ஜே! அப்படி என்றுகோஷம் இட்டுக் கொண்டு போனார்கள்.

ஒரு வீதியோரமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று ஒரு இடத்திலே ஆகாயத்திலிருந்து செப்புக் காசுகள் மழை மாதிரிக் கொட்டியது. கோஷம் இட்டுக் கொண்டு வந்தவர்களிலே பாதிப்பேர் உடனே கலைந்து ஓடினார்கள். அவர்கள் அவர்களுக்குக் கிடைத்த செப்புக்காசை எல்லாம் பொறுக்கினார்கள். மடியில் கட்டிக் கொண்டார்கள். குருநானக்கிடம் சொல்லாமல் நழுவிப் போனார்கள்.

அவர் இதையெல்லாம் கவனிக்காமல் தொடர்ந்து போய்க் கொண்டு இருந்தார். அடுத்த ஊருக்குப் போனார். அங்கே மறுபடியும் பண மழை!

போன தடவை செப்புக்காசு கொட்டியது. இந்தத் தடவை வெள்ளிக் காசு கொட்டியது. இப்பவும் இருந்த கூட்டத்திலே பாதிப்பேர் கலைந்து ஓடினார்கள். முடிந்த வெள்ளிக் காசை அள்ளி எடுத்துக்கொண்டார்கள். நல்ல பிள்ளைக்கு அடையாளமாகச் சொல்லிக் கொள்ளாமலே நழுவிப் போனார்கள். குருநானக் தொடர்ந்து போகிறார். இன்னொரு ஊரிலே மறுபடியும் பணமழை ! இந்தத் தடவை தங்கக் காசாக வந்து விழுந்தது.! இதைப் பார்த்ததும் மீதியிருந்த கும்பலும் கலைந்து ஓடினார்கள். தங்கக் காசை அள்ளி விட்டுப் போனார்கள்!

குருநானக் திரும்பிப் பார்த்தார். கடைசியாக எஞ்சியிருந்தது ஒரே ஒரு சீடர் தான் . செப்புக்காசு, வெள்ளிக் காசு, தங்கக் காசு எதையும் பொருட் படுத்தாமல் இவர் பின்னாலே வந்து கொண்டிருந்தது அவர் ஒருவர் மட்டும் தான். நீ தானப்பா என்னுடைய உண்மையான சீடன்! என்று சொல்லி அவரை வாழ்த்தி விட்டு அவரிடம் தன்னுடைய பணிகளை ஒப் படைத் தார் குருநானக்.

அவ்வளவு தான். அந்தக் கதையைக் கேட்டதும் உண்மைக்கு ஏன் மரியாதை குறைந்து விட்டது என்பது புரிகிறது. நல்லவர்கள் பின்னால் போகிற கூட்டம் குறைவதற்கு இதுதான் காரணம்.

காசுதான்முக்கியம் என்று நினைக்கிறவர்கள். அதிகமாகிவிட்டார்கள். இந்தக் காலத்திலே! காசு முக்கியம் தான்..... இல்லை என்று சொல்லவில்லை! ஆனால் காசு நமக்கு அடிமையாக இருக்கவேண்டும். வேலைக்காரன் மாதிரி இருந்து வேண்டியதை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

நாம காசுக்காக அடிமையாகும் போது தான் விவகாரம் ஆரம்பம். இந்த காலத்து குரு ஒருவர் அவருக்குப் பின்னாலேயும் ஏகப்பட்ட சீடர்கள் இருந்தார்கள். ஒரு காலத்தில் ஒவ்வொரு கூட்டத்தில் ஒவ்வொருவராக நழுவிப் போய்விட்டார்கள் இப்பொழுது எஞ்சியிருப்பது ஒரேயொரு சீடன்தான். ரொம்ப பவ்வியமாக கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

கடைசியில் நீ மட்டுமாவது இருக்கிறாயே அது போதும் நீதான் எனக்கு உண்மையான சீடன் என்றார் குரு .அதற்கு அந்த சீடன் அப்படி இல்லை சுவாமி நீங்க இப்ப உட்கார்ந்திருக்கிற பீடத்திற்கு அடிப் பெட்டியில் பணம் வைத்திருக்கிறீர்கள். அது எனக்குத் தெரியும். அதனாலே நீங்க எப்பொழுது எழுந்து அந்தப்பக்கம் போவீர்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றான்.

# ஜனாதிபதித் தேர்தல் இலங்கையருக்கும் அமெரிக்கருக்கும் இடையிலான போர்!

## ஹரீன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அமெரிக்கக் குடியுரிமையை இன்னமும் கைவிடவில்லை என்பதை, அமெரிக்கப் பதிவாளர் திணைக்களத்தின் பட்டியல் உறுதிப்படுத்தியிருப்பதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார். மேலும் நடைபெறவுள்ள இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு இலங்கையருக்கும் ஒரு அமெரிக்கருக்கும் இடையிலான போராக மாறியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"அமெரி க்கக் குடியுரிமையைத் துறந்தவர்களின் மூன்றாவது பட்டியலிலும் கூட கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் இடம்பெறவில்லை.

எனவே, அவர் இன்னமும் அமெரிக்காவின் குடிமகனாகவே உள்ளார். அந்தவகையில் கோத்தபாய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இலங்கை ஜனாதிபதியாகச் செயற்பட முடியாது.

மேலும் முந்தைய காலாண்டு அறிக்கையில், கோத்தபாய ராஜ பக்ஷவின் பெயர் இருக்காதபோது, மூன்றாவது காலாண்டு அறிக்கை யில் நிச்சயமாக இடம்பெறும் என்று அவரது பேச்சாளர்கள் கூறியிருந்தனர்" எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)

## கோத்தபாயவின் குடியுரிமை விவகாரம் உறுதிப்படுத்துமாறு தேரர் உண்ணாவிரதம்




(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்கப் பிரஜாவுரிமை நீக்கப்பட்டமையை உறுதிப்படுத்துமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கலாநிதி இங்குருவத்தே சுமங்கல தேரரால் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கோத்தபாய அமெரிக்கப் பிரஜாவுரிமையை நீக்கிக் கொண்டமை தொடர்பாக 3 நாட்களுக்குள் உறுதிப்படுத்த வேண்டும் என கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தேரர் முன்னெடுத்துள்ளார்.

அமெரிக்கப் பிரஜாவுரிமை நீக்கப்பட்டவர்களின் பட்டியலில் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் இதுவரை உள்ளடக்கப்படவில்லை.

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தனது டுவிட்டர் தளத்தில் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, கோத்தபாய தொடர்ந்தும் அமெரிக்கப் பிரஜை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கோத்தபாய தனது அமெரிக்கக் குடியுரிமையை கைவிட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரிகேடியர் 8 பேருக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

பிரிகேடியர் தரத்திலுள்ள 8 வீரர்கள் மேஜர் ஜெனரல் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

ஜே.சீ. கமகே, கே.என்.எஸ். கொட்டுவேகெதர, ஜயனாத் ஜயவீர, கே.எச்.பீ. பிரணாந்து, எம்.டீ. விஜேசுந்தர, ஏ.எஸ்.ஹேவாவிதாரன, பீ.ஏ.எல். ரத்நாயக்க மற்றும் எஸ்.எஸ்.வடுகே ஆகியோரே இவ்வாறு பதவியுயர்வு பெற்றனர். (இ-7)

### சஹ்ரான் போன்ற

## தீவிரவாதிகளை வளர்த்த பெருமை எதிர்க்கட்சியினரையே சாரும்

### இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



(கொத்மலை)

சஹ்ரான் போன்ற தீவிரவாதிகளை வளர்த்தெடுத்த பெருமை எதிர்க்கட்சியினரையே சாரும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொத்மலை, ஹப்புகஸ்தலாவ பகுதியில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நேற்று முன்தினம்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த நாட்டில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களின் போது சிறுபான்மை மக்களைக் காப்பாற்றிய பெருமை ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்ததாக இருந்தது.

அந்தப் பிரச்சினைகளைப் பின்புறமாக இருந்து உருவாக்கியவர்கள் எதிரணியில் தற்போது ஜனாதிபதித் தேர்தலில் வாக்குக் கேட்பவர்களே. இதனால் முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர்.

முஸ்லிம் அமைச்சர்கள் ஒன்றாக விலகினர். பின்னர் நிரபராதிகள் என்றதும் மீண்டும் அரசுடன் இணைந்து கொண்டனர்.

சஹ்ரான் போன்ற தீவிரவாதிகளை வளர்த்தெடுத்த பெருமை எதிர்க்கட்சியினரையே சாரும். அன்று ஐக்கிய தேசியக் கட்சி மக்களைக் காப்பாற்றியது. குறுகிய காலத்தில் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுத்து தற்போது சுமுகமான நிலைமை நிலவி வருகின்றது.


அந்த வகையில் சிறுபான்மை மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாப்பான ஒரு கட்சியாகும். எனவே மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




அரியாலை வடமேற்கு ஜே/91 மூத்த பிரஜைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் தின விழா-2019 ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய முத்தமிழ் அரங்கில் ஓய்வு நிலை தபால் அதிபர் அ.பாலச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொண்டார்.

# இந்திய அரசியலைப் புரட்டிப்போட்ட

# அயோத்தி வழக்கு கடந்துவந்த பாதை





(டில்லி)

இந்திய அரசியலை புரட்டிப்போட்ட அயோத்தி வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது. ராமர் பிறந்த இடமாகக் கருதப்பட்ட இடம், யாருக்குச் சொந்தமானது என்பதன் மீதான வழக்கு நேற்று முன்தினம் முடிவுக்கு வந்துள்ளது.

இந்தியாவின் மிகப் பழைமையான இந்த வழக்குக்கு 70 வருட வரலாறு உண்டு. சுதந்திர இந்தியாவில் இந்தப் பிரச்சினை தொடங்கிய நாள் 23 டிசெம்பர், 1949 ஆகும். இதற்கு முன்தினம் நள்ளிரவு, அபய் ராம் தாஸ், ராம் ஷகல்தாஸ், சுதர்ஷன் தாஸ் உள்ளிட்ட சுமார் அறுபது பேர் பாபர் மசூதியின் பூட்டை உடைத்து, குழந்தை உருவ ராமர் சிலையை உள்ளே வைத்தனர்.

இதற்காக, அனைவரின் மீதும் ஐபிசி 147/29/449 ஆகிய பிரிவுகளின்படி அயோத்தி பொலிஸ் நிலையத்தின் தலைமை அதிகாரி பண்டிட் ராம் தியோ துபே என்பவரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து இதில் பைசாபாத் நகர கூடுதல் நீதவானால் போடப்பட்ட ஒரு இடைக்கால உத்தரவின் படி, பாபர் மசூதியின் முக்கிய வாசல் பூட்டப்பட்டு டிசெம்பர் 29 இல் பிரியாதத் ராம் என்ற தனி அதிகாரியின் பராமரிப்பில் விடப்பட்டது.

இத்துடன், அந்தச் சொத்தை பராமரிப்பது குறித்து ஒரு அறிக்கை அளிக்குமாறும் பிரியாதத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இவர் ஜனவரி 5, 1950 இல் அளித்த அறிக்கையின்படி ஒரு பூசாரியை அமர்த்தி பாபர் மசூதியில் இருந்த ராமர் சிலைக்கு அரசு சார்பில் பூஜைகள் நடத்தப்பட்டன.

இதுவரை குற்றவியல் வழக்காக இருந்த இந்த விவகாரம் சிவில் வழக்காகி அதன் நீதிமன்றத்துக்கு மாறுகிறது. ஜனவரி 16, 1950இல் கோபால்சிங் விஷாரத் என்பவர், பாபர் மசூதியின் முத்தவல்லியான ஜஹுர் அகமது, உ.பி. மாநில அரசு மற்றும் பலர் மீது முதல் சிவில் வழக்கை பைசாபாத் நீதிமன்றத்தில் தொடுக்கிறார். இதில், ராமஜென்ம பூமியில் வைக்கப்பட்டிருக்கும் ராமர் சிலையை நிரந்தரமாக அகற்றக் கூடாது எனவும், நாள்தோறும் பூஜை செய்ய எந்தவிதமான தடங்கல்களும் தனக்கு இருக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் இடைக் கால உத்தரவை கோருகிறார்.

அடுத்த மூன்றாவது நாளில் அளிக்கப்பட்ட அதற்கான அனுமதி இன்று வரை அமுலாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அயோத்தி வழக்கின் விசாரணையில் உ.பி. அரசு சார்பில் நீதிமன்றத்தில் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. அதில், பிரச்சினைக்குரிய சொத்தானது 'பாபர் மசூதி' எனும் பெயரில் அழைக்கப்பட்டு பலகாலமாக இங்கு முஸ்லிம்கள் தொழுகை நடத்தி வருவதாகவும், இதனுள் சட்டவிரோதமாக ராமர் சிலை வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இதை எதிர்த்து டிசெம்பர் 5, 1950இல் பரமஹன்ஸ் ராமச்சந்திரதாஸ் என்பவர் கோபால் சிங் தொடுத்தது போலவே அங்கு பூஜை நடத்த அனுமதி கேட்டு மூன்றாவதாக ஒரு வழக்கு தொடுக்கிறார். இது இரண்டாவது வழக்குடன் இணைக்கப்பட்டு பைசா பாத் சிவில் நீதிமன்றத்திலேயே நடைபெற்று வந்தது.

நான்காவதாக டிசெம்பர் 17, 1959இல் நிர்மோகி அகாடா சார்பில் போடப்பட்ட ஒரு வழக்கில் தனி அதிகாரியான பிரியாதத் ராமிடம் இருக்கும் கட்டடத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோருகிறார். பிறகு டிசெம்பர் 18, 1961 இல் சன்னி சென்ட்ரல் வஃக்பு வாரியம் சார்பில் ஐந்தாவதாக ஒரு வழக்கு கோபால்சிங் விஷாரத் மற்றும் சிலரை எதிர்த்து போடப்படுகிறது.

இதில், உ.பி. அரசு வசம் இருக்கும் பாபர் மசூதி தங்களுக்குச் சொந்தமானது எனவும், உள்ளே இருக்கும் ராமர் சிலையை அகற்றி, கட்டடம் மற்றும் சமாதிகள் இருக்கும் அதன் சுற்றுப்புற நிலங்களை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோருகிறது. இவை அனைத்தும் ஒரே மாதிரியான வழக்குகள் என்பதால், மனுதாரர்கள் இசைவுடன் ஜனவரி 6, 1964 முதல் பைசாபாத்தின் நீதிமன்ற நீதிபதி ஒன்றாக்கி விசாரிக்கத் தொடங்குகிறார்.

இத்துடன், சிவில் நீதிமன்றத்தின் சில உத்தரவுகளுக்கு இரு தரப்பினரும் உயர் நீதிமன்றம் சென்று இடையிடையே தடை உத்தரவு பெறுவதும் தொடர்ந்தது.

ஆறாவதாக உமேஷ்சந்திர பாண்டே என்ற சட்டத்தரணி உள்ளே இருக்கும் ராமரை தரிசிக்க மற்றும் பூஜை செய்ய ஏதுவாக கட்டடத்தின் கதவுகளை திறந்து விட வேண்டும் என சிவில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கிறார். இது சம்பந்தப்பட்ட கோப்புகள் உயர் நீதிமன்றத்தில் இருப்பதால் சிவில் நீதிமன்றம் ஜனவரி 28, 1986இல் அனுமதி தர மறுக்கிறது. இதை எதிர்த்து உமேஷ் சந்திர பாண்டே மாவட்ட நீதிமன்றத்தில் செய்த மேன் முறையீடு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இந்த மேன்முறையீட்டை எதிர்த்த பாபர் மசூதியின் அப்போதைய முத்தவல்லியான முகம்மது ஹாசீம் அன்சாரி மற்றும் ஜுஹர் அகமதின் மகன் முகம்மது ஃபரூக் ஆகியோர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உயர் நீதிமன்றத்தில் தொடுத்ததுடன் மாவட்ட நீதிமன்ற உத்தரவு மீது தடையும் கோருகின்றனர். இதில், சிவில் நீதிமன்ற விசாரணை முடியும் வரை, பிரச்சினைக்குரிய சொத்தில் எந்த மாற்றமும் செய்யக் கூடாது என அலகாபாத் உயர் நீதிமன்றம் தடை உத்தரவு போடுகிறது.

இதே போல், உமேஷ் சந்திர பாண்டேவின் அப்பீல் மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதை எதிர்த்து, சன்னி சென்ட்ரல் வஃக்பு வாரியம் சார்பாகவும் ஒரு மனு மாவட்ட நீதிமன்றத்தில் மே 12, 1986இல் போடப்படுகிறது. இதை அடுத்து டிசெம்பர் 16, 1987இல் உ.பி. அரசு சார்பில் 24/151 சிவில் சட்டம் 1908 பிரிவின்படி, முதல் நான்கு முக்கிய வழக்குகளும் சிவில் நீதிமன்றத்திலிருந்து வாபஸ் பெறப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என கோருகிறது.

உ.பி. அரசின் இந்த மனுவை ஏற்றுக்கொண்ட பைசாபாத் மாவட்ட சிவில் நீதிமன்ற அமர்வு முதல்நான்கு வழக்குகளை வாபஸ் பெறச் செய்ததுடன், பாண்டே, அன்சாரி மற்றும் சன்னி வக்பு வாரியத்தால் போடப்பட்ட வழக்குகளையும் மூன்று நீதிபதிகள் கொண்ட அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு விசாரிக்கும் என ஜூலை 10, 1989 இல் உத்தரவிடுகிறது.

இந்தச் சூழலில், டிசெம்பர் 6, 1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டு விட, மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன் தியோகி நந்தன் அகர்வால் என்பவர் புதிதாக ஒரு வழக்கு தொடுக்கிறார். இதுவும் சேர்த்து பாபர் மசூதி சொத்து குறித்த அனைத்து வழக்குகளும் 1989 முதல் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இதன் தீர்ப்புதான் கடந்த செப்டெம்பர் 30, 2010இல் வெளியானது. இதில் மூன்று முக்கிய மனுதாரர்களான இந்து தரப்பு, ராம் லல்லா, சன்னி வக்பு வாரியம் ஆகிய மூன்றுக்கும் 2.77 ஏக்கர் நிலம் பிரித்தளிக்க உத்தரவிடப்பட்டது.

இதை முக்கிய மனுதரார்கள் மூவரும் ஏற்க மறுத்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இவர்களுடன் மற்றவர்களும் இணைய மொத்தம் 14 பேர் தொடுத்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது. 'இந்த வழக்கில் தொல்லியல் துறையின் அறிக்கையை நிராகரிக்க முடியாது. பாபர் மசூதி காலியிடத்தில் கட்டப்படவில்லை. மசூதி கட்டப்பட்ட இடத்தில் கட்டுமானம் இருந்ததை தொல்லியல் துறை உறுதி செய்துள்ளது.

ஆங்கிலேயர் வருகைக்கு முன், அந்த இடத்தில் இந்துக்கள் வழிபாடு நடத்தி உள்ளனர் என்பது பயணக்குறிப்புகள் தெரிவிக்கின்றன. எனவே, சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோவில் கட்டிக்கொள்ளலாம்.

இதற்காக 3 மாதங்களுக்குள் மத்திய அரசு ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்த வேண்டும். முஸ்லிம்கள் மசூதி கட்டுவதற்கு வேறு இடத்தில் 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும்' எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் அதிருப்தி உரிமைப் போராட்டம் தொடரும்

(டில்லி)

அயோத்தி வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு திருப்தி அளிக்கவில்லை எனவும் இதற்காகத் தொடர்ந்து போராடுவோம் எனவும் ஏஐ.எம்ஐ.எம் கட்சியின் தலைவர் அசாசுதீன் ஒவைசி தெரிவித்தார்.


அயோத்தி வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியாகியது.

இந்நிலையில் இது குறித்து க்ருத்து தெரிவித்துள்ள அசாசுதீன் ஒவைசி, 'அயோத்தி வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு திருப்தி அளிக்கவில்லை. உச்ச நீதிமன்றம் உச்சமானதாக இருக்கலாம். ஆனால் அது தவறிழைக்காது எனக்கூற முடியாது.

அரசியல் சட்டத்தின் மீது நாங்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளோம். எங்களது உரிமைக்காக தொடர்ந்து போராடுவோம். எங்களுக்கு 5 ஏக்கர் நிலம் தானமாகத் தேவையில்லை. 5 ஏக்கர் நிலத்தை நிராகரிக்கிறோம். அதனை ஏற்கும் நிலையில் இருக்க விரும்பவில்லை.

அயோத்தி விவகாரத்தில் காங்கிரஸ் தனது போலி நிறத்தை விடுத்து உண்மையான நிறத்தை வெளிப்படுத்தியுள்ளது. பாபர் மசூதிக்குள் 1949 ஆம் ஆண்டு சிலை வைக்கப்படவில்லை.

பாபர் மசூதியின் கதவை ராஜீவ் காந்தி திறந்து விடாவிட்டால் அது இன்று வரை




மசூதியாகவே இருந்திருக்கும். நரசிம்மராவ் தனது பணியைச் சரிவர செய்திருந்தால் பாபர் மசூதி இருந்திருக்கும்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-2)

# ஜனாதிபதி வேட்பாளராக முன்வரவில்லை

# யாருக்குப் பயந்து? எதற்குப் பயந்து?

# பதில் தந்தால் நானும் பதிலளிப்பேன்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நான் யாருக்கோ பயந்து ஜனாதிபதி வேட்பாளராக முன்வரவில்லை என்றால் யாருக்கும் பயந்து? எதற்குப் பயந்து. என்ற கேள்விகளுக்கும் பதில் தர வேண்டும். தந்தால் அவற்றிற்கும் பதிலளிப்பேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். அவர் விடுத்துள்ள வாராந்த கேள்வி பதில் அறிக்கையில்,

கேள்வி:-நீங்கள் பயந்தே ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்றவில்லை என்று ஒரு தமிழ் அரசியல்வாதி குற்றம் சுமத்தியுள்ளார். உங்கள் பதில் என்ன?

பதில்:-அவர் என்ன கூறினார், எங்கு கூறினார்.ஏன் கூறினார் என்பது பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. அவர் அப்படிக் கூறினாரா? என்பது பற்றியும் தெரியாது.ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஒருவேட்பாளராக நிற்கும்படி சில மாதங்களுக்கு முன் பலஅன்பர்கள் கேட்டுக் கொண்டார்கள். நான் மறுத்துவிட்டேன். அதற்கான காரணங்கள் பின்வருமாறு,

1. என்னை அரசியலுக்குள் கொண்டு வர சம்பந்தனும், எஸ். சிறீதரனும் எனது மாணவர் எம்.ஏ.சுமந்திரனும் கேட்டபோது நான் மறுத்தேன். அவர்களின் தொடர் ஆக்கினையால் நான் ஒன்றைக் கூறினேன். அப்போதைய ஐந்து தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் ஒன்று சேர்ந்து அழைத்தால் நான் அவர்களின் கோரிக்கையைச் சார்பாகக் கருத முடியும் என்றேன். சட்டக் கல்லூரி சமகால மாணவரான என் நண்பர் ஆனந்தசங்கரி, மனோ கணேசன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன் உட்பட பலர் என்னை அழைத்ததால் நான் இணங்கி அரசியலுக்கு வந்தேன். என்னை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நிற்குமாறு பல நண்பர்கள் மூன்று. நான்கு மாதங்களுக்கு முன் அழைத்தார்கள். அப்போது அக் கோரிக்கையானது கட்சிகள் சேர்ந்து விடுத்ததொன்றல்ல. அன்பர்கள் சிலரின் அழைப்பே அது.

ஐந்து கட்சிகள் அண்மையில் சேர்ந்து கலந்துரையாடும் போது அவர்கள் பொது வேட்பாளர் ஒருவரையே தேடினார்கள். முக்கியமாக அவர் கட்சி சார்ந்த ஒருவராக இருக்கக் கூடாது என்று தீர்மானித்திருந்தார்கள். நான் அரசியலுக்கு வராமல் வெறும் ஓய்வு பெற்ற நீதியரசராக இருந்திருந்தால், கட்சிசார்பற்ற ஒருவரைகட்சிகள் தேடும் போது. அவர்கள் கேட்டிருந்தால் நான் எனது சம்மதத்தைத் தெரியப்படுத்தியிருக்கக் கூடும். ஆனால் சென்றவருடம் ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி தொடக்கம் நான் ஒரு அரசியல் கட்சியின் செயலாளர் நாயகம். பொது வேட்பாளர் என்பவர் கட்சிசாராது மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவராக இருக்க வேண்டும் என்று சகல கட்சிகளும் கருதியிருந்தார்கள். ஆனால் ஒருகட்சியின் செயலாளர் நாயகமாக இருந்த காரணத்தினால் பொது வேட்பாளர் பதவிக்கு நான் அருகதையற்றவராக இருந்தேன். எனவே ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது தமிழ் வேட்பாளராகக் கலந்து கொள்ள என் கட்சி உறுப்பினர் பதவி எனக்கு இடம் அளிக்கவில்லை.

2. அடுத்து ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளர் போட்டியிட்டால் அவர் ஏதோவொரு காரணத்திற்காகத்தான் போட்டியிடுவார். அக்காரணம் போட்டியை வெல்ல அல்ல. இலங்கையின் ஒவ்வொரு தமிழ் மகனும் மகளும் வாக்களித்தால் கூட ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் தோற்பார். ஆனால் அவர் போட்டியிட முன்வந்ததற்கான காரணம் என்னவென்று பலரும் ஆராய்வார்கள். சிங்களப் போட்டியாளர்களுள் கூடிய சிங்கள பெரும்பான்மை மக்களின் ஆதரவுபெற்ற ஒருவரே சிங்கள மக்களிடையே போட்டியில் வெற்றியீட்டுவார். தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைத் தமிழ்ப் போட்டியாளருக்குக் கொடுத்து அவரை ஒருபுறம் ஒதுக்கிவிட்டால் சுலபமாகச் சிங்கள மக்களின் ஆதரவு பெற்றவர் தீவு பூராகவுமான போட்டியில் வென்றுவிடுவார். ஆகவே ஒரு தமிழ்ப் போட்டி யாளரை உள்ளடக்கியதன் காரணம் பெரும்பான் மையான சிங்கள மக்களின் ஆதரவு பெற்ற வேட்பாளரை வெல்ல வைப்பதற்கே என்று தான் கூற ப்படும். அதற்காக அவரிடம் இருந்து பெருவாரி யான பணம் பெற்று நான் போட்டியில் கலந்து கொண்டேன் என்றுதான் எமது மக்களே வாய் கூசாமல் கூறுவார்கள். ஏன்? என்னை விமர்சித்த குறித்த அரசியல்வாதிகூட நான் நானாகவே வந்திருந்தால் அவ்வாறு தான் கூறக்கூடும். தமிழ் மக்கள் சிலருடன் சேர்ந்து கபடநாடகம் நடத்தித் தமது குறிக்கோள்களை எட்டுவது சிங்கள அரசியல் வாதிகளுக்குக் கைவந்த கலை. ஆகவே தமிழ் வேட்பாளராக முன்வந்து அந்த அவப்பெயரை நான் பெறவேண்டுமா?

3. என்னைப் பொது வேட்பாளராக வரும்படி சிலர் அழைத்த போது பல்கலைக்கழக மாணவர்கள் எமது அதிகப்படியான தமிழ்க் கட்சிகளிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தியிருக்கவில்லை. எனவே பொது வேட்பாளர் என்ற குறியீடு என் சார்பில் பாவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அப்போது இருக்கவில்லை. நான் ஒரு கட்சிக்கு செயலாளர் நாயகம் என்ற வகையில் என் கட்சியின் வேட்பாளர் என்றே பரிணாமம் பெற்றிருக்க முடியும். கட்சிகளை ஒன்றுசேர்த்து தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை அவர்கள் சார்பில் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று எண்ணும் ஒருவருக்கு கட்சி ரீதியாகத் தமது தமிழ் உறவுகளைத் தானே பிரிப்பது என்பது சரியென்று படவில்லை.

4. தமிழ் மக்களை ஒரு தமிழ் வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என்ற முறையில் தனிமைப்படுத்தி வாக்குக்கேட்பது எந்தளவுக்குச் சரி என்ற கேள்வியும் எழுந்தது. தமிழர் சார்பில் ஒருவ்ரை முன்னிறுத்துவதுதான் தமிழ் மக்களின் கோரிக்கைகளை உலகறியச் செய்யலாம் என்று எனது நண்பர்கள் கூறிக் கொண்டார்கள். ஆனால் அவ்வாறு தமிழர்களைத் தனித்துவப்படுத்தி எமது கோரிக்கைகளை முன்வைப்பதால் சமூகத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் நாங்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தோம். எமது தனித்துவமான நடவடிக்கைகளை சிங்கள மக்கள் தீவிரவாதம் என்றே கணிக்கின்றனர். கொள்கை வெறியர் என்றே எம்மைப் பார்க்கின்றனர்." இந்த நாடு சிங்களவருடையது. தமிழர்கள் நேற்று வந்த கள்ளத் தோணிகள். அவர்கள் நேற்று வந்திருந்து இன்று தமக்கென தனித்துவத்தைக் கேட்பது எந்த விதத்தில் சரியாகும்?" என்றே பல சிங்கள மக்கள் சிந்திக்கின்றார்கள். அவர்களைக் குறைகூற முடியாது. அவ்வாறுதான் சிங்கள அரசியல் வாதிகள் அவர்களை நம்பவைத்து வந்துள்ளார்கள். அவ்வாறு தான் இலங்கைச் சரித்திரம் இன்று போதிக்கப்படுகின்றது. நாம் எமது தனித்துவத்தை உலகறியச் செய்யப் போய் சிங்கள மக்களின் மனதில் வெறுப்பையும் பயத்தையும் எழுப்பக் கூடிய ஒரு நிலை வரக்கூடும் என்று எம்முள் சிலர் சிந்தித்தார்கள். தமிழ் மக்கள் ஒன்றுசேர்ந்து தமிழர்க்கே வாக்களிப்பதால் சிங்கள மக்கள் தரப்பில் பாதிப்புறப் போகும் தரப்பால் மீண்டும் ஒருகலகம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளையும் நாம் பரிசீலித்துப் பார்த்தோம். தமிழரின் தனித்துவத்தைப் பாராளுமன்றத்தில், வெளிநாட்டில், சர்வதேச அரங்குகளில் கூற வேண்டுமே ஒழிய அப்பாவி சிங்கள மக்கள் மத்தியில் அல்ல என்ற தீர்மானத்திற்கு வந்தோம். எமது நடவடிக்கைகள் எங்கெங்கோ இருக்கும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு அல்லல்களையும் அழிவுகளையும் கொண்டுவருவதை நாம் விரும்பவில்லை. நாங்கள் மக்கள் தலைவர்கள் என்றமுறையில் எம்மை அரசியலில் வருத்தலாம். ஆனால் எங்களால் மக்கள் பாதிக்கப்படுவதை நாங்கள் முடிந்தளவு தவிர்க்கவேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டவன்" நான். அவ்வாறான சிந்தனை ஒருபயந்த மனிதனின் சிந்தனை என்று யாராவது கூறினால் அதனை நான் மனமுவந்து ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆகவே மேற்படி காரணங்கள் யாவும் சேர்ந்தே நான் தமிழ் வேட்பாளராக முன்னிற்க விரும்பாததற்குக் காரணம். என்றாலும் நான் யாருக்கோ பயந்து ஜனாதிபதி வேட்பாளராக முன்வரவில்லை என்றால் யாருக்குப் பயந்து, எதற்குப் பயந்து என்ற கேள்விகளுக்கும் குறித்த விமர்சகர் பதில் தரவேண்டும். தந்தால் அவற்றிற்கும் பதில் அளிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:B.Sc, Own Business, UK<br>எதிர்பார்ப்பு: படித்தபெண் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/10216 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, BSc, Accountant, London<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/10217 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4 செவ் 8 ல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: B.Sc, அரசநில அளவையாளர<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிகணவரை இழந்தவர்கள், விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும் (உள்நாடு)<br>தொ.இ: B/10218 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3செவ் 2 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HNDM, Accounting & Book keeping, Cashier, Canada<br>எதிர்பார்ப்பு: அரச, உயர்தொழில், சைவபோசணம் விரும்பதக்கது (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/10228 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2 கி.பா: 24<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்: BBA, AIB, உதவி முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம் (உள்நாடு)<br>தொ.இ: B/10220 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 3 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: CMI<br>எதிர்பார்ப்பு: படித்தமணமகன்<br>தொ.இ: G/10232 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் கி.பா: 60 ¾ சூரிசெவ் 8 ல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/10222 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2 செவ் 2 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: முகாமைத்துவபட்டதாரி, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: G/10233 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





# சஜித் வருகை மூலமே தமிழ், முஸ்லிம்களின் ஒற்றுமை நிலைப்படும்

## றிசாத் தெரிவிப்பு

(ஓட்டமாவடி)

தமிழர், முஸ்லிம்களின் ஒற்றுமையை நிலைப்படுத்த சஜித்தை வெல்லச் செய்வோம் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

சஜித்தை ஆதரித்து மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், தயாகமகே, இராஜாங்க அமைச்சர் அலிசாஹிர் மௌலானா, முன்னாள் ஆளுநர்களான அசாத் சாலி, ரோஹித போகொல்லாகம மற்றும் முன்னாள் முதலமைச்சர் நசீர் அஹமட் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அமைச்சர் றிசாத் உரையாற்றுகையில், "அரசியல் விரிசல்களுக்கு அப்பால் கட்சியின் நலனைக் காட்டிலும் சமூகத்தினதும், நாட்டினதும் நன்மை கருதி சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க ஒரே குடையின் கீழ் அணி திரண்டுள்ளோம்.

இந்த நாட்டை மீண்டும் இனவாதத் தீ கருக்கி விடக்கூடாது என்பதற்காகவும் பரம்பரை ஆட்சியொன்று மீண்டும் உருவாக இடமளிக்கக் கூடாது என்பதற்காகவுமே இத்தனைப் பிரயத்தனங்களை எடுத்துள்ளோம்.

கடந்த காலங்களில் நாம் பட்ட துன்பங்கள் மீண்டும் ஏற்படக் கூடாது. பேரினவாதிகள் அப்பாவித் தமிழர்களையும், அப்பாவி முஸ்லிம்களையும் கொடுமைப்படுத்திய யுகத்தை உருவாக்க நீங்கள் எவருமே துணைபோகக் கூடாது.

நாம் இழப்பதற்கு எதுவுமே இல்லை. கடந்த காலம் நமக்கு ஒரு படிப்பினையாக அமைந்துவிட்டது.

மதவாதத்தையும், இன வாதத்தையும் கிளறி எங்களை அடக்கி ஒடுக்க முயன்ற சக்திகளுக்கு இந்த தேர்தலின் மூலம் சரியான கடிவாளம் போடப்பட வேண்டும்" என்று தெரிவித்தார். (இ-7)

# எட்டுத்திக்கிலும் வெற்றி அலை

## சஜித் ஜனாதிபதியாவது உறுதி—வேலுகுமார்

(திகன)

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெறுவார் என்பதை புலனாய்வு அமைப்புகளின் அறிக்கைகளும், சிவில் அமைப்புக்களின் கருத்துக் கணிப்புகளும் உறுதிப்படுத்தியுள்ளதாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

நாட்டில் எட்டுத்திக்கிலும் வெற்றி அலை வீசுவதால் அதனை வரலாற்று வெற்றியாக மாற்றியமைப்பதற்காகவே தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டி, திகனவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இனவாதத்தையும், மதவாதத்தையும் கையிலெடுத்தால் ஜனாதிபதி தேர்தலில் இலகுவில் வெற்றிபெற்று விடலாம் என்பதே ராஜபக்ஷக்களின் பிரசார வியூகமாக இருந்தது.

இதற்காகவே விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உட்பட மேலும் பலர் அரசியல் மேடைகளில் இனவாதத்தை கக்கினர். மதவாதத்தை தூண்டினர். ஆனால் பெரும்பாலான சிங்கள மக்கள் இவற்றை நிராகரித்தனர்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஜித்துக்கு ஆதரவளிக்கும் முடிவை எடுத்தால் அதனை வைத்து சிங்கள, பௌத்த வாக்குகளை வேட்டையாடிவிடலாம் எனவும் திட்டம் போட்டனர்.

எனினும், களநிலவரத்தை சிறப்பாக ஆராய்ந்து, தந்திரோபாய விட்டுக் கொடுப்புடன் நிபந்தனையற்ற ஆதரவை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வந்தனர்.

இதேவேளை, சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியென புலனாய்வு அமைப்புகள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன. அரச சார்பற்ற அமைப்புகளால் நடத்தப்பட்ட கருத்து கணிப்புகளிலும் இது உறுதியாகியுள்ளது.

சில மாவட்டங்களில் மகிந்தவுக்கு ஆதரவு இருந்தாலும், அதற்கு சமாந்தரமாக சஜித் அலையும் வீசுகின்றது. ஆனால், சஜித்துக்கு சாதகமாக உள்ள மாவட்டங்களில், சஜித் 100 வீதம் என்றால் மகிந்த 35 வீதம் என்ற நிலையே இருக்கின்றது. அதாவது 65 சதவீத மேலதிக வாக்குகளால் பல மாவட்டங்களை சஜித் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

அந்த வெற்றியை வரலாற்று வெற்றியாக மாற்றியமைப்பதே எமது இலக்காகும். அதற்காகவே தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

சஜித்தால் மட்டுமே நாட்டில் நீடித்து நிலைக்கக்கூடிய நிலையான சமாதானத்தையும், நிலைபேண்தகு அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1885


### ராணி

நமது வாழ்க்கையில் பலர் கடந்து செல்கின்றனர்... ஆனால் சிலர் அழியாத சுவடுகளை ஏற்படுத்தி விடுகின்றனர்



### குமாரி

வாழ்க்கை நேர்மையாக உள்ளவனை அழவைக்கிறது... நேரத்திற்கு ஏற்ப மாற்றிப் பேசுபவனை வாழ வைக்கிறது



### சந்திரா

காயங்களோடு சிரிப்பது எளிதல்ல... அப்படிச் சிரிக்கத் தொடங்கிவிட்டால் எந்தக் காயமும் பெரிதல்ல



### பிரியா

நீ சரியாக இருந்தால் கோபப்படுவதற்கு அவசியம் இல்லை... நீ தவறாக இருந்தால் கோபப்படுவதில் அர்த்தமில்லை




### வேணி

வாழ்க்கை மிகச்சிறியது அன்பை அதிகமாகவும் கோபங்களைக் கஞ்சத்தனமாகவும் மன்னித்தல்களை விரைவாகவும் வெளிப்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்



### சுமதி

யாரை எங்கே நிறுத்த வேண்டும் என்பதை விட நாம் எங்கே நிற்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்வதே சிறப்பு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கத்தின் திருகோணமலை பிரகடனம் வெளியீடு

(திருகோணமலை)

ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஊடாக சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கப்படும் தமிழ்த் தேசியத்தின் திருகோணமலை பிரகடனம் எனும் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

இந்த விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை குளக்கோட்டம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பு, ஒற்றையாட்சி முறையை நிராகரித்து தமிழ்த் தேசத்தினை அங்கீகரித்து அதற்குத் தனித்துவமான இறைமை உண்டு என்பதனையும் தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் அங்கீகரித்து சமஷ்டி ஆட்சி முறைமையின் கீழ் இலங்கையின் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பவற்றிற்கு முழுமையான சர்வதேச பொறிமுறை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச தீர்ப்பாயம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் சர்வதேச பொறிமுறையுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படல் வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் அரச படைகள் போருக்கு முன்னர் தமிழ் மக்களின் பாவனையில் இருந்த தனியார் மற்றும் அரச காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரசாங்க ஆதரவுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சிங்கள மயமாக்கல், பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்கள குடியேற்றங்களை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கிற்கு மகாவலியின் நதியை திசை திருப்புவது என்ற போர்வையில் வடக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக மாத்திரமே திட்டமிட்டு செயற்படும் சபையாக மகாவலி அதிகார சபை இயங்குவதால் மகாவலி அதிகார சபையின் நியாயாதிக்கம் வடக்கில் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும். அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மொரகஹகந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் நில மற்றும் வழிபாட்டுத்தலங்களின் ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியையும் இளைஞர்களின் .வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வெளிநாடுகளில் வாழும் இளைஞர்களிடம் இருந்து நேரடி முதலீடுகளை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இங்கு காணிகளையும் மற்றும் நிதிகளையும் கையாள்வதில் இப்போது அவர்கள் எதிர்கொள்ளும் சட்டப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.



வடக்கு- கிழக்கிற்கான அரச மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புக்களில் அந்தந்த மாகாணத்தைச் சார்ந்த மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

வடக்கு-கிழக்கினை போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தி அதன் அபிவிருத்திக்கான நிதியை கையாள்வதற்கு வடக்கு- கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் பொதுக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.

மேற்கூறிய கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களாகும். ஜனாதிபதித்தேர்தல் முடிவடைந்து புதிய ஜனாதிபதி பதவியேற்ற மூன்று மாத காலப்பகுதிக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# சஜித்திற்கான ஆதரவு இரு மடங்காக அதிகரிப்பு

## நவீன் நம்பிக்கை



(மஸ்கெலியா)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு நாட்டில் இருக்கும் ஆதரவு இரு மடங்காக அதிகரித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் நாட்டின் மூலை, முடுக்குகளுக்கு சென்றுள்ளோம். நான் ஒரு வாரம் வடமத்திய மாகாணத்தில் இருந்தேன். மகாவலி கிராமங்களுக்கு சென்றேன். சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவு இரு மடங்காக அதிகரித்துள்ளது.

எமக்கு 40 வீதமான சிங்கள மக்களின் வாக்குகள் தேவை. தமிழ், முஸ்லிம் வாக்குகள் கிடைத்தால் நாம் பெற்றி பெற முடியும். நுவரெலியா மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸவை இரண்டு இலட்சம் மேலதிக வாக்குகளை வழங்கி வெற்றி பெற செய்யுமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

சில மாவட்டங்களில் எமக்குப் பாதகமான முடிவுகள் கிடைக்கலாம். அனைத்து மாவட்டங்களிலும் எம்மால் வெற்றி பெற முடியாது. குறிப்பாக நுவரெலியா, கண்டி, மாத்தளை மாவட்டங்களிலும் வடக்கு, கிழக்கிலும் எம்மால் முற்றாக வெல்ல முடியும்.

அதுதான் ஜனாதிபதித் தேர்தலில் எமக்குச் சாதகமாக அமையும். பொதுத் தேர்தலில் வாக்குகள் பிரிந்து செல்லும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இன,மத,சாதி என எந்த வேற்றுமைகளும் இல்லை. வெற்றி பெறக்கூடிய சிறந்த வேட்பாளரை நாங்கள் நிறுத்தியுள்ளோம் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

இலங்கை கடற் பகுதியில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கோவிலம் துறைப்பகுதியில் வடமேற்கு கடல் பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களது டோலர் வள்ளங்கள் மற்றும் மேலும் சில பொருட்களும் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# செய்தித்துளிகள்

## இ.தொ.கா. ஒத்துழைப்பு வழங்கும்

(வட்டவலை)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்பட்ட 50 ரூபா மேலதிக கொடுப்பனவானது, கூட்டு ஒப்பந்தம் முடிவடையும்வரை வழங்கப்படுமாயின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என அதன் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

வட்டவலை ரொச்ல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சாதாரண தரப் பரீட்சைக்கு கூடுதலான பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு ஆகக் கூடுதலான பரீட்சார்த்திகள் இம்முறை தோற்ற இருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்தார்.

இம்முறை பரீட்சைக்கு 7 இலட்சத்து 17 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், இம்முறை பரீட்சை டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்குக் காரணம் இரண்டாம் மொழியாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்கு ஆகக்கூடுதலான . தனியார் பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளமையாகும் எனவும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## சட்டவிரோதமாக தங்கியிருந்த 2 வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த இரு வெளி நாட்டவர்கள் ரத்கம, தெஹிவளை ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டனர்.

ரத்கம பூஸ்ஸ என்ற இடத்திலுள்ள வீடொன்றில் செல்லுபடியான விசா அனுமதிப்பத்திரம் இன்றி தங்கியிருந்து 26 வயதான பங்களாதேஷ் நாட்டவர் ரத்கம பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார். மற்றைய நபர் 36 வயதுடைய மாலைதீவு பிரஜை. இவர் தெஹிவளையில் கைது செய்யப்பட்டார். (ஐ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 140 | 90 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 115 | 120 |
| பச்சைமிளகாய் | 240 | 240 | 200 | 150 | 200 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 | 80 |
| கோவா | 140 | 140 | 160 | 80 | 160 |
| கரட் | 200 | 240 | 200 | 200 | 300 |
| பூசணி | 50 | 60 | 80 | 60 | 120 |
| புடோல் | 120 | 100 | 100 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 200 | 240 | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 120 | 70 | 120 |
| பயற்றங்காய் | 120 | 150 | 150 | 140 | 160 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 140 | 160 |
| பீற்றூட் | 150 | 100 | 160 | 70 | 160 |
| கறிமிளகாய் | 300 | 260 | 300 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 400 | 300 | 300 |
| போஞ்சி | 160 | 130 | 180 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 160 | 70 | 120 |
| கீரை -1பிடி | 40 | 60 | 80 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 50-60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 350 | — | 350 | 150 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 100 | 180 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 80 | 140 | 120 |




# கூனனை ஏமாற்றிய கதை



ஒருமுறை ராஜகுருவை தெனாலிராமன் அவமானப்படுத்தி விட்டான் என்ற குற்றச்சாட்டு அரசவைக்குக் கொண்டு வரப்பட்டது. தெனாலிராமனின் எந்தச் சமாதானத்தையும் அரசர் கேட்கத் தயாராக இல்லை. இராமனுக்குத் தண்டனையை அளித்து விட்டார். இராமன் மீது பொறாமை கொண்ட ராஜகுருவும் மன்னனைத் தூண்டி விட்டார்.

ராஜகுருவை அவமதித்தது மன்னனையே அவமதித்ததாகும். எனவே இக்குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது என்று சொல்லி ராஜகுருவையே தண்டனையளிக்கும்படி கேட்டுக் கொண்டார் மன்னர். ராஜகுரு தண்டனையைக் கூறினார்.

"கழுத்து வரை தெனாலிராமனை மண்ணில் புதைத்து விட்டு யானையின் காலால் தலையை இடறச் செய்து கொல்ல வேண்டும்" என்று தண்டனையளித்தார். மன்னரும் "அப்படியே செய்யுங்கள்" என்று ஆணை பிறப்பித்தார். ஆணையை சிரமேற்கொண்ட காவலர்கள் தெனாலிராமனை இழுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றனர். வழியில் இராமன் அவர்களோடு என்னென்னவோ பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். ஆனால் ராஜகுரு காவலர்களை எச்சரித்து தெனாலிராமன் ஏதேனும் பேசித் தப்பி விடுவான். அதனால் எதுவும் பேசாதீர்கள் என்று கூறியிருந்தார். இந்த எச்சரிக்கை காரணமாக காவலர்கள் எதுவும் பேசாமல் நடந்தனர்.

ஊருக்கு எல்லையில் காடு இருந்தது. அங்கே ஒற்றையடிப் பாதை வழியே தெனாலிராமனை அழைத்துச் சென்றனர். மக்கள் நடமாட்டமில்லாத அமைதியாக இருந்த இடத்தில் நின்றார்கள். அந்த இடத்தில் ஒரு பெரிய பள்ளம் தோண்டினார்கள். தெனாலிராமனை அந்தப் பள்ளத்தில் இறக்கி கழுத்தளவு மண்ணால் மூடி விட்டு யானையைக் கொண்டுவர அரண்மனைக்குச் சென்று விட்டார்கள்.

தெனாலிராமன் தப்பிச் செல்ல வழியறியாது திகைத்து மண்ணுக்குள் தவித்துக் கொண்டிருந்தான். சற்றுத் தூரத்தில் ஒற்றையடிப் பாதை வழியாக யாரோ வருவது தெரிந்தது. "ஐயா!" தெனாலிராமன் பெருங் குரலெடுத்துக் கூவி அழைத்தான். அந்த மனிதன் ராமனின் குரல் கேட்டு மெதுவாக அச்சத்துடன் அருகே வந்தான். அவனைப் பார்த்த ராமன் "பயப்படாதீர்கள். அருகில் வாருங்கள்"என அழைத்தான். வந்தவன் தன் முதுகில் இருந்த துணி மூட்டையைக் கீழே இறக்கி வைத்து விட்டு ராமனின் முகத்தருகே அமர்ந்தான்.

"யாரையா உம்மை மண்ணுக்குள் புதைத்தது?" என்றான்.

இராமன் வந்தவனின் முதுகைப் பார்த்தான். அவன் ஒரு வண்ணான் மூட்டை சுமந்து சுமந்து அவன் முதுகு வளைந்து கூனனாகியிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டான். சட்டென சமயோசிதமாய்ப் பேசினான் இராமன்.

"ஐயா! நானும் உம்மைப் போல கூனனாக இருந்தேன். ஒரு பெரியவர் என்னிடம் ஒரு நாள் முழுவதும் மண்ணுக்குள் புதைந்திருந்தால் கூன் நிமிர்ந்து விடும் என்று சொன்னார். நான் காலை முதல் மண்ணுக்குள்ளேயே இருக்கிறேன். என்னைத் தூக்கி விடும் என் கூன் நிமிர்ந்து விட்டதா பார்க்க ஆசையாக இருக்கிறது" என்றான்.


கூனனும் இராமனை வெளியே எடுத்தான். இராமன் தன் கூனல் நிமிர்ந்து விட்டதாக மகிழ்ச்சி கொள்வது போல நடித்தான். அதை உண்மையென நம்பிய கூனனாகிய வண்ணான் தன்னையும் மண்ணில் புதைத்து, தன் கூனல் நிமிர வழி செய்யும்படி வேண்டிக் கொண்டான். தெனாலிராமனும் வண்ணானைக் குழிக்குள் இறக்கி கழுத்து வரை மண்ணால் மூடிவிட்டுத் தன் வீடு நோக்கிச் சென்றான்.

யானையுடன் வந்த காவலர்கள் தாங்கள் விட்டுச் சென்ற இடத்தில் இராமனுக்குப் பதிலாக வேறொருவன் இருப்பதைப் பார்த்துத் திகைத்தனர். அந்த வண்ணானை அழைத்துக் கொண்டு மன்னரிடம் சென்று ராமனின் தந்திரத்தைக் கூறினர். ராமனின் திறமையைக் கண்டு அவனை மன்னித்து விடுதலை செய்தார் மன்னர்.

## விடுகதைகளும் விடைகளும்

- வாயைப் பிளந்து வீதியோரங்களில் நிற்பான் அவன் யார்?
  **தபாற் பெட்டி**
- முக்கண்ணன் சந்தைக்குப் போகின்றான் அவன் யார்?
  **தேங்காய்**
- மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம் அவன் யார்?
  **சிலந்தி**
- உணவை எடுப்பான் ஆனால் உண்ணமாட்டான் அவன் யார்?
  **அகப்பை**
- எட்டாத ராணி இரவில் வருவாள். பகலில் மறைவாள் அவள் யார்?
  **நிலா**
- வெள்ளை ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை. அது என்ன?
  **தீக்குச்சி**
- சலசலவென சத்தம் போடுவான் சமயத்தில் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
  **அருவி**
- காக்கை போலக் கறுப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?
  **நாவற்பழம்**
- எல்லா வித்தையும் தெரிந்தவன். தெரியாதவன் போல் பாவனை செய்கிறான். அவன் யார்?
  **கோமாளி**
- ஆடி ஆடி நடப்பான், அரங்கதிர வைப்பான். அவன் யார்?
  **யானை**
- அடிப்பக்கம் மத்தளம், இலை பர்வதம், குலை பெரிது, காய் துவர்ப்பு. பழம் தித்திப்பு. அது என்ன?
  **வாழைமரம்**
- ஒருவனுக்கு உணவளித்தால் ஊரையே கூட்டுவான். அவன் யார்?
  **காகம்**
- எங்க வீட்டுத் தோட்டத்திலே தொங்குதே ஏகப்பட்ட பச்சைப் பாம்புகள். அது என்ன?
  **புடலங்காய்**
- "உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்" அது என்ன?
  **தராசு**

## Mahatma Gandhi



Gandiji was born in 1869 to Kaba Gandhi and Putlibai. He was youngest boy in the family. He was not a very clever boy in his class. But through hard work he passed his examination. He got married at the age of thirteen. He married Kasturibai. She was also thirteen.

Gandiji was very shy by nature. He was a vegetarian. He never told lies. He completed his matriculation at eighteen and went to England to study law. He promised his mother that he would not touch meat or drink during his stay in England.

He finished his studies and returned to India. Then he went to south Africa. When he returned he started the civil disobedience movement the satyagraha and the Gandhi movement in India. In all these struggles for freedom he always pleaded, for bloodles warfare and asked the people not to hurt any body. His patience selt suffering and simplicity drew people closer to him. His love of truth and Ahimsha was so great and people all over the world sincerely mourned his death when he died in 1948.

Karuny Ramesh, Grade 09, J/Vembadi Girls' High School

## நிலவே நீ வாழி



எங்கள் பாட்டி ஔவையுடன்
எளிய முயலுக் கிடந்தந்தே
எங்கும் புகழை நாட்டிவிட்டாய்
இனிய நிலவே நீவாழி

உளத்திற் களங்கம் கொண்டே நீ
உயர நின்றும் பயனென்ன?
களங்கம் ஒழிய வழியொன்று
கண்டு சொல்வேன் நீவாராய்

வெள்ளித் தோழர் புடைசூழ
வேண்டும் ஒளியைத் தருகின்றாய்
கள்ளத் தனமாய்ச் சிலவேளை
காணா தெங்கோ மறைகின்றாய்

உன்னை இன்று வரைநாங்கள்
உவந்தே வாவா என்றழைத்தோம்
வென்றே மேலே மிகவிரைவில்
விருந்தாய் வருவோம் உனைத்தேடி.

நோய்களிலே மிகக் கொடிய நோய் அடுத்தவர் மீது அக்கறையற்று இருப்பதே

*~ அன்னை திரேசா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தேர்தல் பிராக்கில் டெங்கு ஒழிப்பை மறந்து விடாதீர்கள்

யாழ்.குடாநாட்டில் டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

இதுபற்றி சில தினங்களுக்கு முன்னரும் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

எனினும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஓர் அசமந்தப் போக்கு இருப்பதைக் காணமுடிகிறது.

அதேநேரம் டெங்குக் காய்ச்சலுக்கு ஆளானவர்களால் யாழ்.போதனா வைத்தியசாலை நிரம்பி வழிகிறது.

டெங்கு நோயாளர்களைக் காப்பாற்றுவதில் மருத்துவர்கள் அல்லும் பகலுமாகப் பாடுபடுகின்றனர்.

எனினும் அவர்கள் நோயாளர்களைக் குணப்படுத்துகின்ற சிகிச்சைகளை வழங்கலரமேயன்றி, நோய்க் கட்டுப்பாட்டு பணியை ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் மேற்கொள்ள வேண்டும்.

எனினும் டெங்குக் கட்டுப்பாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் வேகம் போதாது போல தெரிகிறது.

இதை நாம் கூறுவதானது, அவர்களின் பணியை குறைத்து மதிப்பிடுவதாக யாரும் பொருள் கொள்ளத் தேவையில்லை.

மாறாக முன்னெப்போதும் இல்லாத அளவில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதெனும் போது,

டெங்குக் கட்டுப்பாட்டில் தளர்வு நிலை காணப்படுகிறது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதிலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் வடக்கு மாகாண ஆளுநர் முன்னர் அதீத கவனமெடுத்தாராயினும் தற்போது ஜனாதிபதித் தேர்தல் காலம் என்பதால் அவரும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் கவனக் குறைவாக இருக்க, நோய்த் தடுப்புப் பகுதியினரின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் வேகத்தை இழந்து விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதுதவிர, ஜனாதிபதித் தேர்தல் காரணமாக அரச நிர்வாக அமைப்புகள் தேர்தல் பணியில் தீவிரமாகிவிட, வேகமாகப் பரவும் டெங்குக் காய்ச்சல் பற்றியோ அதன் ஆபத்துப் பற்றியோ கருசனை கொள்ளாமல் இருக்கின்ற சூழமையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்நிலைகளைக் கடந்து போர்க்கால வேகத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதுவிடயத்தில் ஆளுநர் அலுவலகம் அதீத கருசனை கொள்வது அவசியமாகும்.

அதேநேரம் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை இல்லாமல் செய்து பொது சுகாதாரத்துக்கு உதவுமாறு ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிகளில் பிரசங்கம் செய்வதும் அவசியம்.

இவைதவிர; பாடசாலைகள், சந்தைகள், பொது இடங்கள், அலுவலகங்கள் என எங்கும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சுகாதாரப் பிரிவோடு அனைத்து பொது அமைப்புகளையும் இணைத்து டெங்குக் கட்டுப்பாட்டு பணியை அதிவேகமாக மேற்கொள்ள வேண்டும்.

இதுவே டெங்கின் ஆபத்திலிருந்து எமது மக்களைக் காப்பாற்றுகின்ற ஒரே வழியாகும்.

# ஜனாதிபதித் தேர்தலிலேயே சுதந்திரக்கட்சியின் எதிர்காலம்

## வெல்கம சுட்டிக்காட்டு

(வென்னப்புவ)

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவாளர்கள் எடுக்கும் தீர்மானத்துக்கு அமையவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன், ஒரு குடும்பத்தின் எதிர்காலத்துக்காகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# ரணிலும் மகிந்தவும் நல்ல நண்பர்கள்

## என்கின்றார் சஜித்

அரசியலில் நிரந்தர எதிரியாகவோ நிரந்தர நண்பராகவோ எவரும் இல்லை. அந்த வகையில் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க -எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ இருவரும் இப்போது நண்பர்கள என்பதே உண்மை என றார் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேடபாளர் சஜித் பிரேமதாஸ.(ஞா)

# கோத்தபாயவின் அமெரிக்கக் குடியுரிமை சட்டபூர்வமாக இரத்து

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ சட்டபூர்வமாக அமெரிக்க குடியுரிமையை கைவிட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கோத்தபாய ராஜபக்ஷ தற்போதும் அமெரிக்க குடிமக்ன் என்று பரவி வரும் வதந்தியில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் தெரிவித்தார். (இ-7)

# ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஆட்சியை கொண்டு வாருங்கள்

## கோத்தாவை சீண்டிய ரணில்

(ஹற்றன்)

ஜனநாயகத்தை வலுப்படுத்தும ஆட்சியைக்கொண்டு வருவது மக்களின் பொறுப்பு என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற திட்டத்தின்கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை, அருகிலுள்ள சிறந்த பாடசாலைக்கு அனுப்ப வேண்டும்" என்றும் ரணில் தெரிவித்தார்.

அத்துடன், கோத்தபாய ராஜபக்ஷவின் 80 பக்கங்களை கொண்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனநாயகம் என்ற சொல் ஒரு 'இடத்தில் மாத்திரமே உள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# சஜித்,கோத்தா இருவரும் O/L சித்தியடையவில்லை

## ஜே.வி.பி கண்டுபிடிப்பு

ஜனாதிபதி வேட்பாளர்களான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய இருவரும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் கூட சித்தியடையவில்லை என தேசிய மக்கள் சக்தியின் அங்கத்தவரும் ஜே.வி.பி.கட்சியின் வட மாகாண அமைப்பாளருமான சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகின்ற தென்னிலங்கையைச் சேர்ந்த இரு பிரதான வேட்பாளர்களும் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையாத நிலையில் எவ்வாறு கல்விக்கு முன்னுரிமை கொடுக்கும் சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவார்கள் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

யாழ்ப்பாண மக்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள். அதனால் ஒழுக்கமுள்ள ஓர் சமுதாயத்தை எதிர்பார்க்கிறார்கள்.இதனை இரு வேட்பாளர்களால் உறுதிப்படுத்த அவர்களின் கல்வித்தகுதிகள் போதாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-10)

# கோத்தபாயவின் அமெரிக்க டிக்கெட்; எந்தவித உண்மையும் இல்லை

## கெஹலிய மறுப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவின லொஸ ஏஞ்சலுக்கு பயணிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும், அதற்காக விமான டிக்கெட் தயார் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படும் கருத்தில் எந்தவித உண் மையும் இல்லையெனவும் வேட்பாளர கோத்தபாயவின் ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல எம்.பி. தெரிவித்தார்.

இது தமது வேட்பாளர் பெறவுள்ள வெற்றியைத் தடுக்கும் நோக்கில் அரசாங்க தரப்பினரால் முன்னெடுக்கப்படும் சேற்றுப் பிரசாரம் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நல்ல விடயம் எதுவும் ஒரே நாளில் நடந்து விடுவதில்லை. படிப்படியாக முயற்சித்தே வாழ்வில் குறிக்கோளை எட்டிப் பிடிக்க முடியும் என்பதை மறக்காதீர்கள். -புருஷோத்தமானந்தர்

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை"

*~கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)*

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சீரிய வழிகள்



நமது குண்டலினியோகம் நான்கு உறுப்புகளைக் கொண்டு உள்ளது. அவை அகநோக்குப் பயிற்சி, தற்சோதனை, மனவினைத் தூய்மை, முழுமைப்பேறு (Meditation, Introspection, Sublimation and Perfection). இந்நான்கும் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன. ஒன்றால் ஒன்று வளம் பெறுகின்றன. அறியாமையால் வந்த களங்கத்தைப் போக்கி, அதனால் விளைந்த வாழ்க்கைத் துன்பங்களைக் குறைத்து, அமைதியை மனிதனுக்கு அளிக்கவல்லது குண்டலினி தவம். சாதனை செய்து அதன் மூலம் பயனடைய வேண்டிய ஒரு பெரிய நற்பேறு இந்தத் தவம். இதன் மதிப்பு உணர்ந்து பயின்று பயன் பெறுவீர்களாக.

தவத்தில் உட்காரும் போது மனம் ஓடிக்கொண்டே இருக்கிறது என்று சில அன்பர்கள் சலிப்படைகின்றார்கள். இதுதான் இயற்கை நியதி. நாம் வாழ்வில் பெற்ற அனுபவங்கள் யாவும் நம்மிலே பதிவாகி அவை எப்போதும் எண்ணங்களாகப் பிரதிபலித்துக் கொண்டே தான் இருக்கும். இந்தப் பதிவுகளே நமது வாழ்க்கை நியதி. நாம் சில காலம் தவம் பயின்றால் பிறகு நமது மனம் வலிவு பெறும்போது, நாம் எப்போதும் விழிப்பு நிலையில் நம்மைப் பழக்கிக் கொள்ளும்போது, மனம் அலையுறுவது படிப்படியாகக் குறையும். தவம் உயர, உயரத் தற்சோதனையில் ஆழ, ஆழ அந்த அளவிற்கு நமது மனம் நிலைபெறக் காணலாம்.

## அடுத்தசுற்றிற்குத் தகுதி பெற்றது குருநகர் பாடும்மீன் அணி



வலிகாமம் லீக்கின் அனுசரணையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள லீக்குகளில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் என்.நவரட்ண ராஜா ஞாபகார்த்த "தலைவர் கிண்ண" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

பாடும்மீன் அணி சார்பாக சாந்தன், கெயின்ஸ் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்று கொடுத்தனர். (க)

## ஒரே ஓவரில் 5 சிக்ஸர்; மைதானத்தில் ருத்ரதாண்டவம் ஆடிய வீராங்கனை!



பெண்களுக்கான பிக்போஸ் லீக் ஆட்டத்தில் நியூசிலாந்தை சேர்ந்த சோஃபி டெவின், ஒரே ஓவரில் 5 பந்துகளை மைதானத்திற்கு வெளியில் அனுப்பி அசத்தியுள்ளார்.

ஆண்களை போலவே பெண்களுக்காக நடத்தப்படும் பிக்போஸ் லீக் போட்டியானது தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

கரேன் ரோல்டன் ஓவல் மைதானத்தில் நேற்று நடைபெற்ற 20 ஓவர் போட்டியில் அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் பெண்கள் அணியும், மெல் போர்ன் ஸ்டர்ஸ் பெண்கள் அணியும் நேருக்கு நேர் மோதின.

இதில் டொஸ் வென்ற மெல்பேர்ன் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி களமிறங்கிய அடிலெய்டு அணியின் தொடக்க வீரர்கள் சோஃபி டெவின் மற்றும் சுசி பேட்ஸ் ஆரம்பம் முதலே அதிரடி காட்ட ஆரம்பித்தனர்.

அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை குவித்தது. கடைசிவரை விக்கெட்டை இழக்காமல் மைதானத்தில் நிலைத்து நின்று ஆடிய சோஃபி டெவின், ஆட்டத்தின் கடைசி ஓவரில் எதிரணியை மிரட்ட ஆரம்பித்தார்.

மேட்லைன் பென்னா வீசிய கடைசி ஓவரின் முதல் பந்தில் கேட்டி மேக் ஒரு ஓட்டத்திற்கு தட்டிவிட்டு, சோஃபிக்கு வாய்ப்பு கொடுத்தார்.

இதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட சோஃபி, அடுத்த 5 பந்துகளையும் மைதானத்திற்கு வெளியில் அனுப்பி 30 ஓட்டங்களை குவித்தார். (க)

## மீண்டும் சுப்பர் ஓவரில் தோற்றது நியூசிலாந்து; தொடரை வென்று அசத்தியது இங்கிலாந்து



நியூசிலாந்து அணிக்கு எதிரான கடைசி மற்றும் 5ஆவது இருபது-20 போட்டியில் சுப்பர் ஓவரில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, இருபது-20 தொடரை கைப்பற்றி அசத்தியது.

நியூசிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5இருபது-20 மற்றும் 2 டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது.

நான்கு இருபது-20 போட்டிகள் முடிந்த நிலையில் இரு அணிகளும் 2 போட்டியில் வெற்றி பெற்றிருந்த நிலையில், தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் ஐந்தாவது மற்றும் கடைசி இருபது-20 போட்டி நேற்று ஆக்லாந்தில் உள்ள ஈடன் பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

மழை காரணமாக 11 ஓவர் போட்டியாக நடத்தப்பட்டது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களான குப்தில்-முன்ரோ ஜோடியின் அதிரடியால் 11 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 146 ஓட்டங்கள் குவித்தது.

குப்தில் 20 பந்துகளில் 5 சிக்ஸர், 3 பவுண்டரி விளாசி 50 ஓட்டங்கள் குவித்தார். முன்ரோ 21 பந்துகளில் 4 சிக்ஸர், 2 பவுண்டரி விளாசி 46 ஓட்டங்கள் சேர்த்தார்.

11 ஓவரில் 147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி, பேரிஸ்டேவின் அதிரடியால் வெற்றி இலக்கை சமன் செய்தது. 11 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு இங்கிலாந்து அணியும் 146 ஓட்டங்கள் குவித்தது. பேரிஸ்டோவ் 18 பந்துகளில் 5 சிக்ஸர், 2 பவுண்டரி விளாசி 47 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனையடுத்து, உலகக் கோப்பையை போல் இரு அணிகளும் சுப்பர் ஓவரில் மோதின. முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்கள் எடுத்தது.

1 ஓவரில் 18 எடுத்தால் வெற்றி என களமிறங்கிய நியூசிலாந்து அணி, 1 விக்கெட் இழந்து 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் சுப்பர் ஓவரில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, நியூசிலாந்து மண்ணில் 5 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை கைப்பற்றி அசத்தியது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## சிக்சர் அடிக்க பவர் தேவையில்லை சரியான ரைமிங் இருந்தால் போதும்




வங்கதேச அணிக்கெதிரான இரண்டாவது இருபது -20 போட்டியில் தொடர்ந்து மூன்று சிக்ஸர் அடித்த ரோகித் சர்மா அடுத்த பந்தையும் சிக்ஸர் அடிக்க நினைத்தேன் என்று கூறியுள்ளார்.

இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட வங்கதேச அணி, இருபது -20 மற்றும் டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இரண்டாவது இருபது -20 போட்டியில் இந்திய அணியின் தொடக்கவீரரும், அதிரடி ஆட்டக்காரருமான ரோஹித் சர்மா 43 பந்துகளுக்கு 85 ஓட்டங்கள் குவித்தார். இதில் 6 பவுண்டரி 6 சிக்ஸர்கள் அடங்கும்.

அந்த 6 சிக்ஸர்களில், ஒரு ஓவரில் ரோகித்சர்மா ஹட்ரிக் சிக்ஸர் அடித்தார்.

இது குறித்து இந்திய வீரர் சஹாலிடம் ரோகித் கூறுகையில், நான் ஹட்ரிக் சிக்ஸர்கள் அடித்தபோது, அடுத்ததாகவும் 3 சிக்ஸர்கள் அடிக்க முயற்சித்தேன். ஆனால், 4ஆவது சிக்ஸரைத் தவறவிட்டதும் அடுத்ததாக ஒரு ஓட்டம் எடுக்க முடிவு செய்தேன் என்று கூறினார்.

மேலும் உங்களை போல் நான் என்னுடைய இந்த உடம்பை வைத்து சிக்ஸர் அடிக்க முடியுமா? என்று சஹால் கேட்ட போது, அதற்கு அதெல்லாம் முடியும், சிக்ஸர் அடிப்பதற்கு பவர் தேவையில்லை, சரியான டைமிங்கில் பந்தைத் தூக்கி விடுவதுதான் முக்கியம் என்று கூறினார். (க)

## டாடி ஆர்மி ஆனது சென்னை சுப்பர் கிங்ஸ்



2020ஆம் ஆண்டு நடைபெறும் ஐபிஎல் தொடரில் பங்கேற்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் எந்த மாற்றமும் உள்ளதா? என கேள்வி கேட்ட ரசிகருக்கு அணி நிர்வாகம் வித்தியாசமான பதிலை அளித்துள்ளது.

இந்தியாவில் ஆண்டு தோறும் உள்ளூர் கிரிக்கெட் தொடரான ஐபிஎல் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இந்நிலையில் அடுத்த ஆண்டுக்கான வீரர்கள் ஏலம், வரும் டிசெம்பர் மாதம் கொல்கத்தாவில் நடக்கிறது.

ஐபிஎல் போட்டியில் பல அணிகள் இருந்தாலும் டோனி தலைமையிலான சிஎஸ்கே அணிக்கு பெரும் ரசிகர்கள் பட்டாளம் உண்டு.

அந்த வகையில் சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர் ஒருவர், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ டுவிட்டரில் டேக் செய்து, சென்னை அணியில் எந்த மாற்றமும் உள்ளதா? என கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த சென்னை அணி நிர்வாகம், ஆம், டாடி ஆர்மிக்கு ஒரு வயது கூடியுள்ளது என கிண்டலாக குறிப்பிட்டுள்ளது.

ஐபிஎல் தொடரில் பங்கேற்கும் அணிகளிலேயே, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் தான் அதிக சீனியர்கள் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இதை குறிப்பிடும் விதமாக டாடி ஆர்மி என சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு செல்லப் பெயர் வந்தது குறிப்பிடத்தக்கது. (க)

## வெள்ளை வானி...

கிருலப்பனையில் அமைந்துள்ள ஜனநாயக தேசிய அமைப்பு காரியாலயத்தில் நேற்று அமைச்சர் ராஜித சேனாரத்னவின் தலைமையில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெள்ளை வான் கடத்தலுடன் தனக்கு தொடர்பில்லை என்று கோத்தாபய தற்போது தெரிவித்து வருகின்றார். ஆனால் அவரே இதன் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டவர்.

இவ்வாறு கடத்த பயன்படுத்திய வான்களின் ஒன்றினது சாரதியாக நானும் பணிபுரிந்துள்ளேன்.

இந்த கடத்தலுக்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் பெரிதும் ஒத்துழைப்புகளை வழங்கினர். கடத்தல் தொடர்பில் கோத்தாபய பிர்கேடியர் ஒருவருக்கும், மேஜர் ஒருவருக்கும் ஆலோசனைகளை வழங்குவார். அவர்களே இதனை வெற்றிகரமாக செயற்படுத்துவர். இதன் போது நபர்களை கடத்துவதற்கு வாகனமொன்று பயன்படுத்தப்படுவதுடன், அவரை மறைத்து வைத்து சித்திரவதைகளுக்கு உட்படுத்தும் இடத்திற்கு பிறிதொரு வாகனத்திலேயே அழைத்துச் செல்வார்கள்.

இந்த இடங்களில் அவர்கள் மறைத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள். பின்னர் மேலதிக தகவல்களை பெறுவதற்காக அவர்கள் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்படுவார்கள். இவ்வாறு பல கொடுமைகள் செய்த பின்னர் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள்.

பின்னர் சடலத்தில் உள் உறுப்புகளை அகற்றிவிட்டு மொனராகலை - சீத்தாவாக்கை காட்டுப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் போடுவார்கள். அந்த குளத்திலே 100க்கும் அதிகமான முதலைகள் வாழுகின்றன. இன்றும் கூட நீங்கள் அந்த குளத்தை சோதனையிட்டால் மனித எலும்பு கூடுகள் கிடைக்கப்பெறும்.நான் இவர்களுடன் இணைந்து செயற்பட்ட போது இருவர் இவ்வாறு கடத்தப்பட்டு கொலைச் செய்யப்பட்டனர்.

அதில் இரண்டாவது நபரான 60 வயதுடைய ஒருவரை கடத்தும் போது இவரது பிள்ளை கதறியதை பார்த்ததும் எனக்கு அங்கிருக்க மனவருத்தமாக இருந்தது. பின்னர் இங்கிருந்து சென்று விகாரையொன்றில் வாழ்ந்து வந்தேன். ஆனால் மக்களை காப்பாற்ற வேண்டும் என்று பின்னர் இவர்களுக்கு எதிராக முறைப்பாடளிக்க நடவடிக்கை எடுத்தேன்.

இந்த விவகாரம் தொடர்பில் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்த போது , நிலையப் பொறுப்பதிகாரியாகவிருந்தவர் அதனை விசாரணைக்குட்படுத்தாமல் மறைத்து விட்டார். பின்னர் ஊடகங்களுக்கு தெரிவிக்கலாம் என்று அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியபோது ஊடகங்களும்இதனை வெளியிட மறுத்து விட்டன.

இந்நிலையிலே அமைச்சர் ராஜித இந்த விடயம் தொடர்பில் அக்கறை கொண்டுள்ளதாக தெரிய வந்ததை அடுத்து அவரிடம் தெரிவித்தேன். பின்னர் அவர் எனக்கு உதவுவதாக கூறினார். அதற்காகவே இன்று (நேற்று) ஊடக சந்திப்பை மேற்கொண்டு தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார். (ஞா)

## புலிகளின் நிதி...

இந்நிலையில் நாட்டு மக்கள் அச்சத்தில் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

ராஜபக்ஷர்கள் குடும்பத்தினர் மீது தனக்கு தனிபட்ட முரண்பாடுகள் இல்லை எனவும் ஜனாதிபதி வேட்பாளர் கோதாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக பணிபுரிந்த போது இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் மோசடிகள் குறித்து இனி வரும்காலங்களில் துரித விசாரணை முன்னெடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

கிருலபனையில் அமைந்துள்ள ஜனநாயக தேசிய அமைப்பு காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. (ஞா)

## கிணற்றில் தவறி...

களைக் கண்காணிப்பதிலும் மருத்துவர்கள் இரவு பகலாக பணியாற்றி வருகின்றனர்.

கட்டுக்கடங்காமல் டெங்குக் காய்ச்சல் பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பலரும் கேட்டுள்ளனர். (ஞா)

## நாளை மறு...

வரும் வியாழக்கிழமை பத்திரிகைகளிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் ஒரு செய்தியை மாத்திரமே உள்ளடக்க முடியும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர் மூலம் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னாயக்க குறிப்பிட்டார். (ஞா)

## கிணற்றில் தவறி...

கிணற்றின் தொட்டியை கழுவிக் கொண்டிருக்கும் போது மயக்கம் ஏற்பட்டு கிணற்றில் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## தமிழர்கள் தலை நிமிர்ந்து...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முல்லைத்தீவு தேர்தல் பிரசார கூட்டத்தை முடித்துக்கொண்டு விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநாச்சி இரணைமடு பகுதியில் வருகை தந்த மகிந்த ராஜபக்ஷவை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழக் கூடிய சூழலை நாம் உருவாக்குவோம். ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் போன்று நாம் தமிழ் மக்களை ஏமாற்றப் போவதில்லை அவர்களின் தேர்தல் விஞ்ஞபனத்தில் கூட மூன்று மொழிகளிலும் மூன்று விதமாக விடயங்களை முன் வைத்துள்ளனர் என எதிர்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்தில் 4 ஆயிரம் மில்லின்களை பெற்றுள்ளனர். ஆனால் என்ன செய்தனர்? கிளிநொச்சியில் எங்களுடைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியை விட சொல்லுமளவுக்கு எந்த அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளபடவில்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறது. சஜித் ஏமாற்றுகிறார். இதற்குள் இணைந்துகொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும்கூட்டுகளவாணிகளாக உள்ளனர் என மகிந்தராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். (ஞா-100.312.350)

## செல்லக்கதி...

தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு மற்றும் வாள் வீச்சு என்பன அங்கு பதிவாகி இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

## தமிழ் மக்கள்...

வாய்ப்பளிக்கப்படவில்லை. பலர் காணாமலாக்கப்பட்டதோடு வெள்ளை வானில் கடத்தப்பட்டதாக வும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். (ஞா)

## அதிகாரப்பகிர்வு தொடர்பில்...

இடம்பெற்ற ரவிராஜின் நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாசவை நீண்ட காலமாக எமக்கு தெரியும். அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சகல மக்களையும் ஒற்றுமைப் படுத்தி நாட்டை முன்னேற்றி சகல மக்களும் சமத்துவமாக வாழ வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அதனைத் தவிர அதியுச்ச அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்குவதன் மூலமாக மக்கள் மத்தியில் சமத்துவத்தை ஏற்படுத்தி சமாதானத்தை வேண்டும் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஆனால் கோத்தபாய ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் எதுவும் கூறவில்லை. நாங்கள் செய்த தவறுகளை தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள் இனிமேல் இவ்வாறான தவறுகளைச் செய்ய மாட்டோம் எனவும் அவர்கள் கூறவில்லை. அவர்கள் கூறுகின்றனர் நடந்ததை மறந்துவிட்டு எம்மோடு கைகோர்த்து வாருங்கள் என்று. எங்கே கூட்டிச் செல்லப் போகிறார்களோ தெரியவில்லை. சிறுபான்மையினரின் வாக்கு தேவையில்லை என்று கூறியுள்ளனர். ஏலும் என்றால் அதனைச் செய்து காட்டுங்கள். எம்மை வெருட்டியோ, மிரட்டியோ எதையும் செய்ய முடியாது என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ஞா-30.101)

## வெள்ளைக்கொடியுடன் வந்த தமிழர்களை...

எழுப்பியுள்ளார். தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஈழம் அவசியமென நான் நினைக்கவில்லை. சிங்கள மக்களுக்கு வழங்கும் உரிமைகளைப் போன்று எங்களுக்கும் சமவுரிமைகளை வழங்குமாறு கோருகின்றனரே தவிர யாரும் ஈழம் வேண்டும் எனக் கேட்கவில்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே தமிழர் தரப்பு முன்வைத்துள்ள 13 அம்சக் கோரிக்கைகள் குறித்து பேசுவதற்கு தயாரில்லை என்பதைத் தாண்டி நிறைவேற்ற முடியாத விடயங்கள் இருக்குமாயின் அது குறித்து இந்த சூழலில் பேசுவது பொருத்தமற்றது.

தேர்தல் நேரத்தில் இவ்வாறான கோரிக்கைகளை முன் வைப்பதை விடவும் தேர்தலுக்கு முன்னர் இவ்வாறான கோரிக்கைகளை முன் வைத்திருக்கலாமே.

வாக்களிப்பை புறக்கணிப்பது அல்லது பிரதான இரு வேட்பாளருக்கும் அளிக்கப்படாத வாக்குகள் அனைத்தும் வீணடிக்கப்படும் வாக்குகளாகும்.

அவ்வாறு வாக்களிக்காதிருப்பது வட, கிழக்கு மக்கள் தங்களுடைய எதிர்காலத்திற்குச் செய்யும் பாரிய தவறாகும். முழுமையான சர்வாதிகார ஆட்சிக்குச் செல்வதா அல்லது மீண்டும் இந்த நாட்டில் முழுமையான ஜனநாயகத்தை நிலைநாட்டும் முடிவை எடுப்பதா என்பதை சிந்திக்க வேண்டும்.

கேள்வி - இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தேசிய பாதுகாப்பு விடயம் பிரதானப்படுத்தப்படுகின்றமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்..?

போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்காத, தொடர்புகளைக் கொண்டிருக்காத, புலிகள் மீது அச்சம் கொண்டிருந்த, சாதாரண தமிழ் மக்களை வெள்ளைக் கொடியுடன் வரக் கூறி அவர்களை சுட்டுக் கொலை செய்து நந்திக்கடலில் இரத்த ஆறு ஓட விட்டமையா தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முறைமை?

பின்னர் போர் நிறைவுக்கு வந்து, ஆறு வருட காலத்திற்குள் பொதுபலசேனா, சிங்கள ராவய போன்ற அமைப்புக்களை உருவாக்கியமையா அவர் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்திய முறை? ராஜபக்ஷவினர் சிங்கள மக்களுக்கு எவ்வாறான பாதுகாப்பை வழங்கினர்.

வீதிகளில் இராணுவத்தினரை நிறுத்துவதே தேசிய பாதுகாப்பல்ல. மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஞா)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 788
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.11.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,097,075/-
வெற்றி இலக்கங்கள் 11 23 30 35 R
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

வசனா
சீட்டிழுப்பு வாரம் 519
வர்ணம் மஞ்சள்
திகதி 10/11 2019 ஞாயிற்றுக்கிழமை
R 21 23 55 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,749,820
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1073
சீட்டிழுப்பு திகதி 10.11.2019 ஞாயிற்றுக்கிழமை
K 01 37 63 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,431,884
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 10/11/2019
வெற்றி வாரம் 2674
வர்ணம் ஊதா
தனுசு
வெற்றி இலக்கங்கள் 36 40 43 46
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,055,838
2019/11/11 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 10-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2297
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 06 43 45 57
தேசிய லொத்தர் சபை

என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா
தன நிதானய
திகதி - 2019.11.10
சீட்டிழுப்பு இலக்கம் - 225
D 02 18 19 68
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2019/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 4046
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 6 1 6 7 0 0
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 622
லக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 28 44 45 58

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்

# இறுதி அமைச்சரவைக் கூட்டம் இன்று

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இறுதி அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று திங்கட் கிழமை இந்த கூட்டம் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

செவ்வாய்க்கிழமைகளிலேயே அமைச்சரவைக் கூட்டம் இடம் பெறுவது வழமை.

எனினும், அன்று பூரணை தினம் என பதால் இன்றைய தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம் பெறவுள்ளதாக கூறப படுகின்றது.

எதிர் வரும் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறவுள்ள நிலையில் இன்று நடைபெற வுள்ள அமைச்சரவைக் கூட்டமானது ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறும் இறுதி அமைச்சரவைக் கூட் டம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)


150க்கும் மேற்பட்டவர்களுக்கு
உள்நாட்டு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு
விசா வழங்கி சாதனை படைத்த
SIKARAM ACADEMY இன்
10வது ஆண்டு நிறைவையொட்டி
3 - 6 மாதத்தில்



Switzerland
New Zealand
Australia
Canada
Student Visa
Work Visa - மற்றும்
German உல்லாசப் பயணக்கப்பல்
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடனான
Tourism & Hospitality Management
TVEC & UK Certified
ஹொட்டேல் கற்கைநெறி with
3ஏ மாதத்தில் ஆங்கிலத்தில் சரளமாக பேச
FREE ENGLISH அடிப்படையிலிருந்து IELTS வரையில்
No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
021 221 9 221
077 3616 798
SIKARAM ACADEMY
221-1/1. மின்சார நிலைய வீதி
(2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம். இஷாரா றெக்ஸ் - றீன் கேர்ல் அருகே
(C-8193)



றொமானியா
வேலைவாய்ப்பு
பாரிய வீதிக் கட்டமைப்பு வேலைத்திட்டத்தில்
30 பணிநிலைகளுக்கு 280 வெற்றிடங்கள்
உணவு, தங்குமிடம்
மருத்துவ வசதிகள்
இலவசம்!
சம்பளம்
600 - 1,100 US$
99,500 - 199,100
விசா – டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!
3 அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய...
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
077 00 38 215
077 55 46 956
021 221 9 221
221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம். The Lovers/Tean Girlsக்கு அருகே)
License No. 2268 www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-8193)



FRANCE
Student Visa
No IELTS
0760579999
(C-8192)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
0768226240
V2 TRAVELS
(C-8115)



சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(C-8109)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(929)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத
நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
(C-8189)



BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON
BOC Travels (PVT) Ltd
(SUBSIDIARY OF BANK OF CEYLON)



இது ஓர் இலங்கை
வங்கியின் துணை
நிறுவனம்
11ஆம் அகவையில்
கால் பதிக்கும் இவ்வேளையில்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
எமது மனம் நிறைந்த நன்றிகள்



விமானப் பயணச்சீட்டு கருமபீடம்
இலங்கை வங்கி மேற்தரக்கிளை, 1 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி
(வேம்படிச்சந்தி அருகாமை), யாழ்ப்பாணம்.
021 222 4575/ 021 222 4576 / 070 384 9335/ 070 395 1794
11 YEARS ANNIVERSARY
BOC Travels


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.